Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 12

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 287

சனிக்கிழமை 09 செப்ரெம்பர் 2023

ஆவணி 23ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054



## கெஹலியவுக்கு எதிரான பிரேரணை தோற்கடிப்பு!

கொழும்பு, செப்ரெம்பர் 9

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிரான நம்பிக் கையில்லாப் பிரேரணை நாடாளுமன் றத்தில் நேற்று 40 மேலதிக வாக்குக ளால் தோற்கடிக்கப்பட்டுள்ளது. »11

## உ/த முடிவில் விரக்தி: மாணவன் தற்கொலை!

மன்னார், செப். 9

அண்மையில் வெளி யான உ/த பரீட்சை முடிவுகளில் விரக்தி யடைந்த மாணவர் ஒருவர் தவறான முடிவெடுத்து உயிரி ழந்துள்ளார். மன்னா ரைச் சேர்ந்த மாணவரே »11

## திரிபோலி கொலைப்படை இன்றும் இயங்குகின்றது!

### தனி விசாரணை அவசியம் நளின் பண்டார வலியுறுத்து



கொழும்பு, செப். 9

நாடாளுமன்ற உறுப்பினர் பிள்ளையான் தலைமை யில் செயற்பட்ட திரிபோலி கொலைப் படை தொடர்பில் தனியான விசாரணைகள் »11

## கையிருப்புச் சொத்துகள் குறைவடைவு!

கொழும்பு, செப். 9

இலங்கையின் உத்தியோகபூர்வ கையிருப்பு சொத்து களின் அளவு கணிசமா கக் குறைந் »12

கொக்குத்தொடுவாய்

## மனிதப் புதைகுழியிலிருந்து பெண் போராளிகளினது எச்சங்கள்



முல்லைத்தீவு, செப். 9

கொக்குத்தொடுவாய் மனிதப் புதை குழியில் விடுதலைப்புலிகளில் இரண்டு பெண் போராளிகளின் மனித எச்சங் கள் நேற்று அகழ்ந்து எடுக்கப்பட்டன. அந்த மனித எச்சங்களுடன் மீட்கப் பட்ட ஆடைகளில் போரா ளிகளின் அடையாளத்தைக் »11



ஈஸ்டர் தாக்குதல் விவகாரம்:

## நாடாளுமன்றத்தில் 2 நாள் விவாதம்!

கொழும்பு, செப். 9

உயிர்த்தஞாயிறுத் தாக்குதல் மற்றும் தேசியப் பாதுகாப்புத் தொடர்பில் நாடாளுமன்றத்தில் இரு நாள்கள் விவாதம் நடத்தப்படவுள் ளது. »11

## கனடா ஆசைகாட்டி ரூ.55 லட்சம் மோசடி!

யாழ்ப்பாணம், செப். 9

கனடாவுக்கு அனுப் பிவைப்பதாகத் தெரிவித்து, யாழ்ப் பாணத்தைச் சேர்ந்த ஒருவரிடமிருந்து 55 இலட்சம்ரூபா மோசடி செய் »11

மருத்துவத் தவறால் கையிழந்த சிறுமி

## அனைத்து விசாரணைகளும் இன்றுடன் நிறைவடையும்!

யாழ்ப்பாணம், செப். 9

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை யில் காய்ச்சல் காரணமாகச் சேர்க்கப் பட்ட சிறுமிக்குக் கை அகற்றப் »11

காங்கேசன்துறை

## சிமெந்துத் தொழிற்சாலையில் 845 கிலோ இரும்பு திருட்டு

பொலிஸில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், செப். 9

காங்கேசன்துறை சிமெந் துத் தொழிற்சாலையில் »11

உயர்தரத்தில் சித்தியடையாமல்

## போலிச் சான்றிதழை வைத்து மூன்று வருட ஆசிரியசேவை

சந்தேகநபர் கைது

யாழ்ப்பாணம், செப். 9

போலிச் சான்றிதழைப் பயன்படுத்தி வடமாகாண ஆசிரிய சேவை யில் இணைந்து மூன்று வருடங்களாகக் கடமையாற்றிவந்த நப ரொருவர் யாழ்ப்பாணம் மாவட்ட விசேட குற்றத்தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி குணரோயன் தலைமையிலான »12



## நீதிமன்றத்தின் மீதான நம்பிக்கை எம்.பி.க்களால் குலைக்கப்படுகிறதாம்!

அமைச்சர் விஜயதாஸ ஆதங்கம்

கொழும்பு, செப். 9

நீதிமன்றம் தொடர்பில் மக்களுக்கு இருக்கும் நம்பிக் கையைக் குலைக்கும் வகையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கருத்துவெளியிடக்கூடாது என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்சவ வலி »11



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கொக்குத்தொடுவாயில்

# போராளிகளது எச்சங்களே மீட்பு சர்வதேச கண்காணிப்புக் தேவை

ரவிகரன் வலியுறுத்து



**முல்லைத்தீவு, செப். 9**

**கொக்குத்தொடுவாய் புதைகுழியில் இறுதிப்போரின்போது இராணுவத்தினரிடம் சரணடைந்த போராளிகளே சித்திரவதைக்குட்படுத்தப்பட்டு கொன்று புதைக்கப்பட்டுள்ளனர். மீட்கப்பட்ட தடயப்பொருள்கள் அதனையே துல்லியமாக உணர்த்துகின்றன. இதிலுள்ள உண்மைத்தன்மைகள் வெளிப்படவேண்டுமாயின் சர்வதேச விசாரணை தேவை.**

இவ்வாறு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.


கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி இரண்டாம்நாள் அகழ்வாய்வுகளை அவதானித்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி இரண்டாம் நாள் அகழ்வுப் பணிகளின்போது, துப்பாக்கிச் சன்னங்கள், துப்பாக்கிச் சன்னங்கள் துளைத்த பெண்களுடைய ஆடைகள், கண்களுக்குக் கட்டுவதற்குப் பயன்படுத்தியிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படும் வகையிலான துணி என்பன தடயப் பொருள்களாக மீட்கப்பட்டுள்ளதுடன், மனித எச்சங்களும் மீட்கப்பட்டுள்ளன. இன்னும் பல மனித எச்சங்கள் இனங்காணப்படலாம்.

மீட்கப்பட்ட தடயப்பொருள்களின் அடிப்படையில், இறுதிப்போரில் இராணுவத்தினரிடம் சரணடைந்த முன்னாள் போராளிகளைக் கண்களைக் கட்டி- சித்திரவதைக்குட்படுத்தி- துப்பாக்கியால் சுட்டுப் படுகொலை செய்து புதைத்திருக்கலாம் என்பதையே துல்லியமாக வெளிப்படுத்துகிறது.

முதல்நாள் அகழ்வுப் பணிகள் முடிவுறுத்தப்பட்டதன் பிற்பாடு, மனிதப் புதைகுழி வளாகம் பொலிஸாரின் பாதுகாப்பிலிருந்தபோது புலனாய்வாளர்கள் உள்நுழைந்து ஒளிப்படங்கள் எடுத்துள்ளனர். கடமையிலிருந்த பொலிஸார் பார்த்துள்ளனர். எனவே இந்தப் புதைகுழிக்குள் புதைந்துள்ள உண்மைத்தன்மைகளை மேலும் புதைத்து அழிச்சாட்டியம் செய்யாது வெளிப்படுத்த அகழ்வுப் பணியில் சர்வதேச கண்காணிப்பைக் கோருகின்றோம்- என்றார். (ச-246)



## கனடாத் தூதரக ஆலோசகர் யாழ்.நூலகத்துக்கு வருகை

யாழ்ப்பாணம், செப். 9

இலங்கை மற்றும் மாலைதீவுக்கான கனடாத்தின் அரசியல் மற்றும் வர்த்தகத்துக்கான ஆலோசகர் டானியல் வூட், நேற்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் பொதுநூலகத்துக்கு வருகை தந்திருந்தார்.

கனடாத் தூதரக ஆலோசகரை யாழ்.மாநகரசபை ஆணையாளர் த.ஜெயசீலன் வரவேற்றார்.

இதன்போது நூலகச் செயற்பாடுகள் தொடர்பில் கேட்டறிந்த அவர், நூலகத்தின் சகல பகுதிகளையும் பார்வையிட்டார். (ச-27)

## பதவி பறித்தாலும் கட்சி தாவேன்

கொழும்பு, செப். 9

சுதந்திரக் கட்சியின் பங்காளிப்புடன் பரந்துபட்ட அரசியல் கூட்டணி அமைப்பதே எனது ஒரே நோக்கமாகும் என்று அந்தக் கட்சியின் பொதுச் செயலர் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

கட்சியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதால் தயாசிறி ஜயசேகர பிறிதொரு கட்சியில் இணைவார் என வெளியாகும் தகவல் தொடர்பில் வினவிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது :-

ஒருபோதும் நான் சுதந்திரக் கட்சியை விட்டுச் செல்லமாட்டேன், ஐக்கிய தேசியக் கட்சியில் இணையவுள்ளதாகவும், ஐக்கிய மக்கள் சக்தி பக்கம் தாவவுள்ளதாகவும் வெளியிடப்பட்டுவரும் தகவல்கள் அரசியல் சூழ்ச்சிகாரர்களால் முன்னெடுக்கப்படுபவை.

நான் எந்தவொரு தவறையும் இழைக்கவில்லை. அதனால் தான் பொதுச் செயலர் பதவி தவிர ஏனைய பதவியை வழங்கத் தயார் எனக் கட்சித் தலைவர் மைத்திரிபால சிறிசேனகூட தற்போது அறிவித்துள்ளார். பரந்துபட்ட அரசியல் கூட்டணி அமைப்பதே நோக்கமாகவுள்ளது- என்றார். (ஓ-44)

## ஈஸ்டர் தாக்குதல் விசாரணை ஷானியிடம் ஒப்படையுங்கள்

கொழும்பு, செப். 9

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பான மீள் விசாரணையை சி.ஐ.டியின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகரவிடம் ஒப்படைக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் உண்மைத்தன்மை மீண்டும் மீண்டும் வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றது. உயிர்த்த ஞாயிறுத் தொடர்பான மீள் விசாரணையை, இது தொடர்பான அறிவும் அனுபவமும் உள்ள ஷானி அபேசேகரவிடம் ஒப்படைக்கப்படவேண்டும். உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலை விசாரிக்கவே 2019 இல் மொட்டுக் கட்சிக்கு மக்கள் ஆணை வழங்கினர்.

எமது நாட்டில் வெளிப்படையான மற்றும் பக்கச்சார்பற்ற விசாரணைகள் மேற்கொள்ளப்படாவிட்டால் சர்வதேச விசாரணை நடத்தப்பட்டு பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நீதி வழங்கவேண்டும்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் உரிய முறையில் விசாரணை நடத்திய ஷானி அபேசேகர சிறையிலடைக்கப்பட்டதன் மூலம் சில விடயங்கள் பற்றிய உண்மை புலப்படுகின்றது. இந்தத் தாக்குதல் தொடர்பான மீள் விசாரணையை கைவிலங்குகள் இல்லாமல், கழுத்தில் கயிறுகள் பிணைக்கப்படாமல் ஷானி அபேசேகரவிடம் வழங்குமாறும் ஜனாதிபதியிடம் கேட்டுக் கொள்கின்றேன்- என்றார். (ஓ-44)



## இலங்கைக்கு ஐஸ் கடத்தல் தமிழகத்தில் இருவர் கைது

யாழ்ப்பாணம், செப். 9

இலங்கைக்குக் கடத்துவதற்காக வீடொன்றில் பதுக்கிவைக்கப்பட்டிருந்த 6 கிலோ ஐஸ் போதைப்பொருள் இந்தியாவின் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள வேதாளைப் பகுதியில் மீட்கப்பட்டுள்ளது.

இந்திய மத்திய உளவுத்துறைக்குக் கிடைத்த தகவலுக்கமைய மண்டபம் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் மேற்கொண்ட அதிரடிச் சோதனையில் இந்தப் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது.

அதனைப் பதுக்கி வைத்திருந்த குற்றச்சாட்டில் வீட்டின் உரிமையாளர் உட்பட இருவர் கைதுசெய்யப்பட்டனர்.

பறிமுதல் செய்யப்பட்ட ஐஸ் போதைப்பொருள் இந்திய மதிப்பில் சுமார் 20 கோடி ரூபா எனத் தெரிவிக்கப்படுகிறது.

சந்தேகநபர்களைச் சட்டநடவடிக்கைக்குட்படுத்த மேலதிக விசாரணைகளை மண்டபம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச-100)

## சனல் - 4 காணொலியால் ராஜபக்சக்களை வீழ்த்த முடியாது

கொக்கரிக்கிறது பெரமுன



கொழும்பு, செப். 9

சனல் - 4 காணொலி போன்ற சூழ்ச்சிகள் மூலம் ராஜபக்சக்களினதோ அல்லது சிறிலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியினதோ அரசியல் பயணத்தைத் தடுக்க முடியாது. தேர்தலொன்று நடக்கட்டும். மக்கள் யார் பக்கம் என்பதைக் காண்பிப்போம்- இவ்வாறு கூறியுள்ளார் பொதுஜன பெரமுனக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான ரோஹித அபேகுணவர்த்தன.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது :-

கோத்தபய ராஜபக்சவை வெற்றிபெற வைக்கவே உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் திட்டமிடப்பட்டதாம் எனக் கூறப்படுகின்றது. 2019 இல்தான் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் நடத்தப்பட்டது, ஆனால், 2018 பெப்ரவரியில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் நாம் அமோக வெற்றியைப் பதிவுசெய்துவிட்டோம்.

அதேவேளை, சனல் - 4 திரைப்படம் இப்ராஹிம் என்பவரை ஏன் மறந்தது? இப்ராஹிம் என்பவர் ஜே.வி.பியின் தேசியப் பட்டியல் வேட்பாளராக இருந்தார். அவரின் இரு மகன்மார் தற்கொலைக் குண்டுதாரிகள். இந்த விடயம் ஏன் மறைக்கப்பட்டது? இப்படியான நகர்வுகள்மூலம் எமது அரசியல் பயணத்தைத் தடுக்க முடியாது- என்றார். (ஓ-44)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பூனைக்கு விளையாட்டாம் ...ண்டெலிக்கு சீவன் போகுதாம் எண்டு சொல்லுறவை. எங்கட விதானைமார் செய்யிற ஒருவேலை அப்பிடித்தான் இருக்கு. நாட்டில விதானை மாருக்குப் பற்றாக்குறை எண்டதால அவைக்கு வேலை கூடிப்போச்செண்டு புதிசா நாலாயிரம் பேரை விதானை வேலைக்கு எடுக்கப் போறதா அரசாங்கம் அறிவிச்சிருக்கு. ஆனால் இப்ப வேலையில இருக்கிற சில விதானைமார், தாங்கள் செய்யவேண்டிய வேலையளை எப்பிடித் தட்டிக்கழிக்கலாம் எண்டு கடும் பிளான் பண்ணி கொண்டிருக் கினமாம்.

அஸ்வெசும திட்டத்தில தெரிவுசெய்யப்படாத ஆக்கள், தங்கட பேரையும் சேர்க்கிறதுக்கான மீளாய்வு வேலையள் நடந்து கொண்டிருக்கு. அதுக்கு விதானைமார், அந்தக் குடும்பங் களின்ர வருமானத்தை உறுதிசெய்து குடுக்கோணும். ஆனால் விதானைமாரின்ர சங்கம், தங்களுக்கு இதுக்கு கொடுப்பனவு இல்லையெண்டதால உந்த மீளாய்வுக்கு ஒத்துழைக்கிறேலை எண்டு முடிவெடுத்தி ருக்காம். அந்த முடிவுக்கு எங்கட தமிழ் விதானைமாரும் சம்மதித்து இப்ப 'அஸ்வெசும' திட்டத்துக்கு எதிரா 'ஒத்துழையாமை' போராட்டத்தை நடத்துகினம். ஆனால் இவையின்ர இந்த ஒத்துழையாமையால கஷ்டப்பட்ட சனங்களின்ர வயித்திலயெல்லோ அடிவிழப்போகுது. தங்கட வருமானத்தை உறுதிப்படுத்தவெண்டு இவையளிட்ட சனம் போனால், ஒவ்வொரு சாட்டைச் சொல்லி 'அந்த டொக்குமெண்ட்ஸைக் கொண்டுவா, இந்த டொக்குமெண்ட்ஸ் இல்லை' எண்டு அலைக்கழிக்கினம். இந்தச் சாட்டெல்லாம் அவை அந்தநேரத்தில கண்டுபிடிக்கிறேலை. அவைக்கெண்டு ஒரு வட்ஸப் குரூப் இருக்கு. அதில தான் எல்லாரும் கும்பலாக் கதைச்சு முடிவெடுத் திட்டு, அப்பாவிச் சனங்கள் அலையிறதைப் பார்த்து ஆனந்தப்படுகினம். இது உண்மையா ஆனந்தம் இல்லை 'சாடிஸம்'எண்டுற வியாதி. இப்பிடி விதானைமார், என்னதான் மேலிடத்தில இருந்து பிரஸர் வந்தாலும், சனத்தை அலையவிட்டே ஆகிறது எண்டதில உறுதியா இருக்கினம். (இதைப்பற்றி தங்கட வட்ஸப் குரூப்பில அவையள் ஆடின கதகளியளின்ர 'ஸ்கிரீன் ஷொட்' எல்லாம் பட்சியிட்டையும் சிக்கியிருக்கு. உரிய இடங்களுக்கும் அது போகும்)

சரி, அஸ்வெசுமவுக்கு கொடுப்பனவு தரு மட்டும் ஆதரவளிக்கிறேலை எண்ட உங்கட சங்க முடிவுக்கு நீங்கள் கட்டுப்படுங்கோ. அதிலகூட பிழையில்லை. ஆனால் 'அஸ்வெசும'எண்டு போடாமல், தனியா ஒரு வருமான உறுதிப்படுத் தலைச் செய்து குடுத் தால், நாலு குடும்பங்களின்ர பசியாவது தீருமெல்லோ. அதோட 'அஸ்வெசும' வேலை செய்யேலை எண்டும் உங்கட சங்கத்தை திருப்திப்படுத்தலாமெல்லோ.
விதானைமார் இதை விளக்கிக் கொள்ளுவினமோ?



- பட்சி

இலங்கைக் கடற்படையினரால்

## 6,230 கிலோ பீடி இலைகள் பறிமுதல்

மன்னார், செப் 9
இலங்கை கடற்படையினர் 2023 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்தில் மட்டும் மேற்கொண்ட விசேட தேடு தல் நடவடிக்கைகளின் போது 6 ஆயிரத்து 230 கிலோவுக்கும் அதிகமான பீடி இலைகளைக் கைப்பற்றியுள்ளனர்.
இவற்றுடன் தொடர்புடைய 9 சந் தேகநபர்கள் கைதாகியுள்ளது டன், 3 டிங்கிப் படகுகளும் கைப் பற்றப்பட்டுள்ளன. (ஒ-ரி2-213)

## மருந்துக்குச் சென்றவர் மயங்கி வீழ்ந்து சாவு!

யாழ்ப்பாணம், செப். 9
உடலில் காணப்பட்ட கட்டு ஒன் றுக்கு மருந்தெடுக்கச் சென்ற முதியவர் ஒருவர் மருத்துவ மனை வெளிநோயாளர் பிரி வில் மயங்கி வீழ்ந்து உயிரிழந் துள்ளார்.
இந்தச் சம்பவம் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் வியாழக் கிழமை நடந்துள்ளது.
தனங்களப்பைச் சேர்ந்த சின் னத்தம்பி இரத்தினம் (வயது-78) என்பவரே இவ்வாறு உயிரி ழந்துள்ளார். மருத்துவரிடம் தனது உடலில் ஏற்பட்ட கட்டு தொடர்பில் சொல்லிக் கொண்டி ருந்தவேளை அவர் மயங்கி வீழ்ந்துள்ளார். உடனடியாக அவரை அவசர சிகிச்சைப் பிரி வுக்குக் கொண்டு சென்றபோது அவரது உயிர்பிரிந்துவிட்டது என்று மருத்துவமனை தெரிவித் துள்ளது. சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் விசார ணைகளை முன்னெடுத்துவரு கின்றனர். (ச-9)






நல்லூரான் சிறப்பம்சம்

### காத்தல் செய்வாய் கடம்பா

முருகாவென்று காலமெலாம் பாதகமலம் பணிந்து
உருகியே உள்நிணைந்து துயர்களைய பாடி நின்றால்
அருவமாய் நின்றுலைக்கும் பெருந் துயரை
உருவாய் நின்றெமைக் காத்தல் செய்வாய் கடம்பா

சைவப்புலவர் வெற்றிவேல் சக்திவேல்



## சட்டவிரோத ஆஸி. பயணம் 16 பேரிடம் தண்டம் அறவீடு

யாழ்ப்பாணம், செப். 9
சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியாவுக்குச் செல்ல முற்பட்டோரில் 16 பேர் நேற்றுமுன்தினம் வியா ழக்கிழமை பருத்தித்துறை நீதிமன்றில் தண்டப்பணம் செலுத்தினர்.
2013ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவுக்கு சட்டவிரோத மாக தப்பிச்செல்ல முற்பட்ட குற்றச்சாட்டில் 55 பேர் பருத்தித்துறை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு நீதி மன்றில் முற்படுத்தப்பட்டனர்.
இந்த வழக்கு கடந்த மாதம் எடுத்துக்கொள்ளப்பட்ட போது சந்தேகநபர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டதை யடுத்து பருத்தித்துறை நீதிமன்று அவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபா தண்டப்பணம் விதித்து தீர்ப்பளித்தது.
அன்றையதினம் 9 பேர் தண்டப்பணம் செலுத்தினர்.
24 பேர் காலஅவகாசம் கோரியநிலையில் நேற்றுமுன் தினம் செலுத்துவதற்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.
எடுக்கப்பட்ட வழக்கில் 24 பேரில் 16 பேர் தண்டப்பணம் செலுத்தினர். ஒருவர் தவணைமுறைப்படி 50 ஆயிரம் ரூபா செலுத்தி அடுத்த தவணையில் மிகுதி செலுத்துவ தாகத் தெரிவித்தார்.
மிகுதி ஏழு பேரும் தண்டப்பணத்தைச் செலுத்துவதற்கு இந்த மாதம் 19ஆம் திகதி தவணையிடப்பட்டு வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது.
வழக்குக்கு முன்னிலையாகாதவர்களுக்கு எதிராக 192 ஆம் பிரிவின் கீழ் ... இல்லாத ஒருமுக விசா ரணை இடம்பெற்று வருகிறது. (ச-100)

## 4000 கிராம அலுவலர்கள் துரிதகதியில் உள்ளீர்ப்பு

கொழும்பு, செப். 9
சுமார் 4ஆயிரம் கிராம அலுவலர்கள் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவ டிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்று உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச் சர் அசோக பிரியந்த தெரிவித்துள்ளார்.
ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந் திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்;
நாட்டின் பொருளாதார நிலை உள்ளிட்ட பல்வேறு காரணிகளைக் கருத்திற் கொண்டு பொது சேவையை சமநிலைப் படுத்துவது அவசியம்.
தற்போது, அரச சேவைக்கு ஆட்சேர்ப்பை நிறுத்தும் கொள்கையை அரசாங்கம் கடைக்கொண்டுள்ளது. ஆனாலும் கிராம அலுவலர் பணியிடங்கள் கணிச மான அளவில் வெற்றிடமாகவுள்ளன.
இதனால் கிராமமட்டத்தில் முன்நோக்கிச் செல்வதில் பல சவால்கள் ஏற்பட்டுள் ளன. எனவே வெற்றிடமாகவுள்ள 4 ஆயிரம் கிராம அலுவலர் பதவிகளை நிரப்புவதில் அரசு கவனம் செலுத்தி யுள்ளது. இந்தவிடயம் பிரதமரின் செய லாளருக்கு தலைமையிலான குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது - என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூரில் சூரியோற்சவம்



வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் 19 ஆவது நாள் திருவிழாவான சூரியோற்சவம் நேற்று வெள்ளிக்கிழமை காலை நடைபெற்றது. வசந்தமண்டபப் பூசையைத் தொடர்ந்து ஏழு குதிரைகள் பூட்டிய இரதத்தில் எழுந்தருளிய சூரியபகவான் வீதியுலா வந்தார். (ச)

# சண்டிலிப்பாயில் திருடர் கைவரிசை

மானிப்பாய், செப். 9

சண்டிலிப்பாயிலுள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர். அந்த வீட்டில் இருந்த 10 ஆயிரம் ரூபா பணம், தோடு, மோதிரம் மற்றும் எரிவாயு சிலிண்டர் என்பன களவாடப்பட்டுள்ளன. வீட்டின் சமையலறையானது 20 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள நிலையில் சமையல் அறையில் வைக்கப்பட்டிருந்த மேற்படி பணம் மற்றும் பொருள்களே இவ்வாறு திருடப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் குறித்து மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-ரி2-27)

# ஆசிரியர் பற்றாக்குறை; பெற்றோர் போராட்டம்!

கிளிநொச்சி, செப். 9

**கிளிநொச்சி தெற்கு வலயத்துக்குட்பட்ட வேரவில் இந்து மகா வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்விப் பிரிவுக்கு போதிய ஆசிரியர்கள் நியமிக்கப்படாமையால் தமது பிள்ளைகளின் கல்வி பாதிக்கப்படுவதாகவும் ஆசிரியர்களை நியமிக்குமாறு கோரியும் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பாடசாலையின் நுழைவாயிலை மூடி பெற்றோர் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**

ஆரம்பப் பிரிவில் 79 மாணவர்கள் கல்வி கற்று வருகின்ற நிலையில் மூன்று ஆசிரியர்கள் மட்டுமே கடமையாற்றி வருவதாகவும் மேலும் இரண்டு ஆசிரியர்களுக்கான பற்றாக்குறை காணப்படுவதாகவும் ஆசிரியர்களை நிரந்தரமாக நியமிக்குமாறும் கோரி குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. ஜெயபுரம் பொலிஸ், கிளிநொச்சி தெற்கு வலயக்கல்விப்பணிப்பாளர் கி.கமலராஜன் மற்றும் கோட்டக்கல்வி அதிகாரி ஆகியோர் சம்பவ இடத்துக்குச் சென்று நிலைமைகளைக் கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவர முயற்சித்தனர்.

ஆயினும் ஆசிரியரை நியமிக்கும்வரை தாங்கள் போராட்டத்தைக் கைவிடப்போவதில்லை எனப் பெற்றோர் தெரிவித்தனர். குறித்த பாடசாலை ஆரம்பப் பிரிவுக்கு ஆசிரியர் ஒருவர் நியமிக்கப்பட்டதையடுத்து போராட்டம் கைவிடப்பட்டது. (ஒ-ரி2-113)

# 50 ஆவது ஆண்டு விழா
## துவிச்சக்கர நடைபவனி

யாழ்ப்பாணம், செப். 9

வடமராட்சி வல்வை மகளிர் மகா வித்தியாலயத்தின் பொன்விழா நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

ஆரம்ப நிகழ்வாக மாணவிகளின் துவிச்சக்கர வண்டி பவனி பாடசாலையிலிருந்து ஆரம்பமாகி வல்வெட்டித்துறை - பருத்தித்துறை வீதி ஊடாகச் சென்று அங்கிருந்து நவிண்டில் சந்தியைச் சென்று, பின்னர் அங்கிருந்து உடுப்பிட்டி சந்தியை அடைந்து பின்னர் அங்கிருந்து வல்வெட்டித்துறை மக்கள் வங்கி முன்றிலை அடைந்தது. பின்னர் மாணவிகள், பழைய மாணவிகள் அங்கிருந்து நடைபவனியை ஆரம்பித்து பாடசாலை முன்றிலை வந்தடைந்தனர். (ஒ-ரி2-27)





# நல்லூர்க் கந்தனை நோக்கிப் பாதயாத்திரை

நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் தேர்த்திருவிழாவை முன்னிட்டு வவுனியா - வேப்பங்குளம் ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயத்திலிருந்து நடை பாதயாத்திரை நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு பக்தி பூர்வமாக ஆரம்பமானது.

மேற்படி பாதயாத்திரை வவுனியா -மன்னார் வீதி ஊடாக வவுனியா நகரை அடைந்து, அங்கிருந்து கனகராயன்குளம் மாரியம்மன் ஆலயத்தை கடந்த வியாழக்கிழமை இரவு சென்றடைந்தது. நேற்று வெள்ளிக்கிழமை காலை முதல் மீண்டும் தொடரும் பாதயாத்திரை ஏ-9 பிரதான வீதி வழியாக 128 வரையான ஆலயங்களைத் தரிசித்தவாறு ஆலயங்களில் நடைபெறும் பூசை வழிபாடுகளிலும் கலந்து கொண்டு நல்லூர்க் கந்தனின் தேர்த் திருவிழாவன்று கோவிலை வந்தடையவுள்ளது. (ஒ-ரி3-66)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். நண்பர்களால் ஆதாயம் கிடைக்கக்கூடும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். முயற்சிகளைத் தவிர்க்கவும்.

**இடபம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். சகோதரர்கள் ஆலோசனை கேட்டு வருவார்கள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். முயற்சிகள் சாதகமாக முடியும்.

**மிதுனம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் பெரியவர்களின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். உற்சாகமாகக் காணப்படுவீர்கள்.

**கடகம்:** அவ்வப்போது மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு இருக்காது. எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும்.

**சிம்மம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டிய நாள். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கன்னி:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை.

**துலாம்:** திடீர்ச் செலவுகள் ஏற்படும். தேவையான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். பிள்ளைகளின் பிடிவாதப் போக்கு வருத்தம் தரும். அலைச்சல் ஏற்படும். சங்கடங்கள் ஏற்படும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**தனுசு:** மகிழ்ச்சி தரும் நாள். மன வருத்தம் நீங்கி அந்நியோன்னியம் அதிகரிக்கும். மகிழ்ச்சி உண்டாகும். தந்தைவழி உறவினர்களால் வீண் செலவுகள் ஏற்படும்.

**மகரம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். சகோதரர்கள் பணம் கேட்டு நச்சரிப்பார்கள். செலவுகள் அதிகரித்தாலும் சமாளித்துவிட முடியும். பிரச்சினைகள் நீங்கும்.

**கும்பம்:** நீண்டநாள்களாக எதிர்பார்த்து ஏமாந்த பணம் இன்று கைக்கு வந்து மகிழ்ச்சி தரும். சிலருக்கு தந்தையுடன் மனக்கசப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது. பிரச்சினைகள் ஏற்படும்.

**மீனம்:** சிந்தித்துச் செயற்படவேண்டிய நாள். அனுசரித்துச் செல்வது நல்லது. மற்றவர்களுடன் வீண் சர்ச்சைகளில் ஈடுபடவேண்டாம். வீட்டில் பொறுப்புகள் அதிகரிக்கும். வழிபாடு நலம் சேர்க்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## நாளொரு நல்வார்த்தை

என்ன நிலை வந்தாலும் தைரியத்தை விடாதே! நீ சாதிக்கப் பிறந்தவன் துணிந்து எதையும் செய்!

– சுவாமி விவேகானந்தர்

## வெற்றியளிக்கும் ரணில் தந்திரம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த எடுத்துள்ள முயற்சிகளை வரவேற்பதாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் ருக் தெரிவித்துள்ளார். இலங்கை தொடர்பான அவரது வாய்மூல அறிக்கை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் முன்வைக்கப்பட்டது. அதிலேயே ஜனாதிபதியின் '13' தொடர்பான முயற்சியையும் தமிழ்க் கட்சிகளுடனும், புலம்பெயர் தமிழர்களுடனும் பேச்சு நடத்தும் அவரது எத்தனத்தையும் அவர் வரவேற்றுள்ளார்.


ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்ன நோக்கத்துக்காக '13'ஐ கையில் எடுத்தாரோ அதை அவர் அடைந்துகொண்டிருக்கின்றார். தென்னிலங்கையில் சிங்கள – பௌத்த கடும்போக்குவாதிகளை கொதிப்படையச் செய்வதன் ஊடாக தனக்கான வாக்கு வங்கியை உறுதிப்படுத்திக்கொள்வது, சர்வதேச சமூகத்தின் முன்பாக தன்னை தீர்வு முயற்சிக்கு அர்ப்பணிப்புள்ளவராகக் காட்டிக்கொள்வது ஆகிய இரண்டு வழிகளிலும் அவருக்கு இலாபமே.

'13' ஆவது திருத்தம் அதனூடான மாகாணசபை முறைமை என்பன அறிமுகமான காலத்திலிருந்தே அதன் போதாமை தொடர்பில் தமிழர்கள் திரும்பத் திரும்பக் கூறிவருகின்றனர். '13'ஆவது திருத்தம் என்பது மாயமான், அதில் எதுவுமில்லை, கடந்தகாலப் பட்டறிவுகளும் அதனையே உணர்த்துகின்றன. நிச்சயமில்லாத அதிகாரப் பரவலாக்கத்தால் தமிழர்கள் திரும்பத் திரும்ப தீர்வுக்காக கையேந்தி நிற்கவேண்டி ஏற்படும். இப்படிப்பட்ட ஒன்றை வைத்து பௌத்த – சிங்கள பேரினவாத அரசாங்கங்கள் தமிழர்களையும், சர்வதேசத்தையும் ஏமாற்றி வருகின்றன. மீண்டும் அந்த முயற்சியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கையில் எடுத்திருக்கின்றார், இப்போது அவரது முறை. சர்வதேசத்தை ஏமாற்றும் முயற்சிக்கு அவருக்குக் கிடைத்துள்ள பரிசுதான் ஆணையாளரின் வரவேற்பு அறிக்கை. ஆனால், தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் இது மிகப் பெரிய பின்னடைவு. ரணில் விக்கிரமசிங்கவின் இந்தச் சூழ்ச்சியை உணர்ந்துகொள்ளாது அல்லது உணர்ந்துகொண்டும் தமிழ்த் தலைவர்கள் என்று சொல்லிக்கொள்ளும் சிலர், '13'ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தல் என்ற பெயரில் அதனைக் காவித்திரிகின்றனர்.

இதற்கு மேலாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வ கட்சி பேச்சு, தமிழ்க் கட்சிகளுடன் பேச்சு என்று இழுத்தடித்து ஏமாற்றி வருகின்றார். ஆனாலும் தமிழ்க் கட்சிகள், ரணிலின்எடுத்த இழுப்புக்குஎல்லாம்பின்னால்செல்கின்றன. இது அவருக்கு இன்னமும் வாய்ப்பாகியிருக்கின்றது. அவர் தீர்வைத் தரப்போவதில்லை. தமிழ் மக்களின் அடிப்படை – அன்றாட பிரச்சினைகளைக்கூட அவர் தீர்த்து வைக்கப் போவதில்லை. தமிழ்க் கட்சிகள் அவரது அழைப்பில் நடைபெறும் பேச்சுகளில் பங்குபற்றுவதால் சர்வதேச சமூகத்திடம் நற்சான்றிதழ் பத்திரத்தை ரணில் விக்கிரமசிங்க பெற்றுக்கொள்கின்றார்.

அரசாங்கம் பேச்சுக்கு அழைத்துப் போகவில்லை என்றால் சர்வதேசசமூகம் தமிழ்க் கட்சிகளைத் தவறாக நினைக்கும் என்றெல்லாம் தமிழ்க் கட்சிகள் கதையளந்திருந்தன. ஒன்றுமே ஆக்கபூர்வமாக நடக்காத விடயங்களுக்குப் பின்னால் சென்று ரணில் விக்கிரமசிங்கவுக்கு பெயர் வாங்கிக்கொடுப்பதைவிட, சர்வதேச சமூகத்தை மத்தியஸ்தத்துக்கு அழைத்துப் பேச்சுக்கு செல்லலாம். ஆனால் ,இவை எதையும் கணக்கிலெடுக்காது திரும்பத்திரும்ப ரணில் விக்கிரமசிங்கவின் காலடியில் வீழ்ந்து கிடந்து , அவருக்கு சர்வதேசத்தின் நன்மதிப்பை பெற்றுக் கொடுக்கும் வேலையைத்தான் தமிழ்க் கட்சிகள் செய்திருக்கின்றன என்பது ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையிலிருந்து தெளிவாகத் தெரிகின்றது.

இனியாவது தமிழ்க் கட்சிகள் ரணிலின் தந்திரத்தைப் புரிந்துகொண்டு அவரின் வலையில் சிக்காமல் இருந்தால் நல்லது.





## பணத்துக்காக விடுதலைப்புலிகளை காட்டிக்கொடுத்தவர் பிள்ளையான்

### ஹிருணிகா கடும் தாக்குதல்

**கொழும்பு, செப். 9**

**பணத்துக்காக புலிகளின் போராட்டத்தைக் காட்டிக்கொடுத்த பிள்ளையான், தற்போது இந்தப் பக்கம் இருப்பதால் அவரின் நடத்தை மாறுமா என்ன? என்று கேள்வி எழுப்பியுள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரான ஹிருணிகா பிரேமசந்திர.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் தகவல்களை பிள்ளையானின் வலதுகையாக இருந்தவரே வெளிப்படுத்தியுள்ளார். இதுதொடர்பில் மக்கள் மத்தியில் சந்தேகம் ஏற்பட நியாயமான காரணம் உள்ளது. பிள்ளையான் பிரபாகரனுடன் இருந்தவர். அந்த அமைப்புடன் இணைந்து செயற்பட்டுவிட்டு, தனது தனிப்பட்ட தேவைகளுக்காக அந்த அமைப்பை காட்டிக் கொடுத்தவர். பிள்ளையானின் இந்தச் செயல், எமக்கு (சிங்கள மக்களுக்கு) வீரச் செயலாகத் தெரியலாம். பணத்துக்காக உளவுத் தகவல்கள், உபாயங்களை அரசுக்கு வழங்கினார். ஒன்றாக இருந்த தனது தலைவரையே காட்டிக்கொடுத்த அந்தநபர் (பிள்ளையான்) எம்முடன் இணைந்ததால் அவரின் இந்த நடத்தை மாறுமா?

பிள்ளையானுக்கு வலதுகரமாக இருந்தவர்தான் தற்போது தகவல்களை வெளியிட்டுள்ளார். பிள்ளையான் சிறையில் இருக்கும்போது, முஸ்லிம் அடிப்படைவாதிகளைச் சந்தித்து, கோத்தாபயவை வெற்றிபெற வைப்பதற்காகத் திட்டத்தைத் தீட்டினார் என அவர் கூறியுள்ளார்- என்றார் ஹிருணிகா. (ஒ.44)

## ஈஸ்டர் தாக்குதல் 3 நாள்கள் விவாதம்

கொழும்பு, செப். 9

**உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் புதிதாக வெளியாகியுள்ள தகவல்கள் தொடர்பில் நாடாளுமன்றத்தில் மூன்று நாள்கள் விவாதம் அவசியம் என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.**

நாடாளுமன்றம் நேற்றுக் காலை 9.30 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கூடியது. இதன்போதே எதிரணியின் சார்பில் மேற்படி கோரிக்கையை எதிரணி பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல இந்தக் கோரிக்கையை விடுத்தார். (ஒ-44)

## கடவுளின் தண்டனை

### குமார வெல்கம சாடல்

கொழும்பு, செப். 9

ஈஸ்டர் தாக்குதலுடன் தொடர்புடைய அனைவரையும் தேவன் துடைத்தெறிந்து விடுவார் எனவும் தேவன் தண்டனை வழங்க ஆரம்பித்துள்ளதாகவும் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

'சனல் - 4 தொலைக்காட்சி பற்றி கூறுவதற்கு எதுவுமில்லை. எனினும் தேவன் மேலே இருந்து பார்த்துக்கொண்டிருக்கின்றார் என்பதை மறந்துவிட வேண்டாம். தேவன் தண்டனை வழங்க ஆரம்பித்துள்ளார் என்றும் அவர் தெரிவித்தார். (ஒ-இ)


## நாளை

10.09.2023 ஞாயிற்றுக்கிழமை
ஆவணி 24

சுபநேரம் : 09.03 – 10.33
ராகுகாலம் : 4.33 – 06.03

ஏகாதசி விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கையகற்றப்பட்ட சிறுமி விடயத்தில் நீதியான விசாரணை தேவை

**சி.வி.விக்னேஸ்வரன் தெரிவிப்பு**

யாழ்ப்பாணம், செப்.9

**விசாரணை முடிவுறாமல் குற்றவாளிகளைத் தீர்மானிக்க முடியாது. இடது கை மணிக்கட்டுடன் அகற்றப்பட்ட சிறுமி விடயத்தில் நீதியான விசாரணை நடைபெற்று குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் -இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-
தாதியர்களின் தவறே சிறுமியின் கை துண்டிப்பதற்குப் பிரதான காரணம் என்று கூறப்படுகின்றது.
இந்த விடயத்தில் சம்பந்தப்பட்ட அனைவரும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும்.
சிறுமியின் கல்வி, வாழ்க்கை என்பன பாதிக்கப்பட்டுள்ள நிலையில், அரசாங்கம் இழப்பீட்டைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் - என்றார். (ஏ-27)

## வேகக்கட்டுப்பாட்டை இழந்த முச்சக்கரவண்டியால் விபத்து

சாவகச்சேரி, செப். 9
சாவகச்சேரி பேருந்து நிலையத்துக்கு முன்பாக நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை வேகக் கட்டுப்பாட்டை இழந்த முச்சக்கரவண்டி வீதியோரத்தில் நிறுத்தப்பட்டிருந்த காருடன் மோதியதில் விபத்தொன்று ஏற்பட்டுள்ளது. எவருக்கும் பாதிப்பு ஏற்படாத நிலையில் இரு வாகனங்களும் சேதமடைந்துள்ளன. (ஒ-ரி3-9)

## மருந்து ஒவ்வாமையால்
## உயிரிழந்தோருக்கு இறப்புச்சான்றிதழ்கள் வழங்கப்படவில்லை

கொழும்பு, செப். 9
அண்மைய தினங்களில் மருந்து ஒவ்வாமை காரணமாக உயிரிழந்தவர்களுக்கு இதுவரை இறப்புச் சான்றிதழ்கள் கிடைக்கவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் காவிந்த ஜயவர்தன தெரிவித்துள்ளார்.



நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
குறித்த நபர்களின் குடும்பங்களுக்கு ஆறு மாதங்களில் இறப்புச் சான்றிதழ் வழங்குவதாக உறுதியளிக்கப்பட்டுள்ளது. தற்போது அந்த மக்களுக்கு தற்காலிக இறப்புச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. இறப்புக்கான குறிப்பிட்ட காரணம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை
இதன் காரணமாக சுகாதார அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதத்தில் இந்த விடயங்களை முன்வைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார். (ஒ-இ)

## மெய்வல்லுநர் போட்டிகளில் சாதித்த இராமநாதன் கல்லூரி

யாழ்ப்பாணம், செப். 9
யாழ். மாவட்ட மெய்வல்லுநர் சங்கத்தால் மாவட்ட மட்ட கனிஷ்ட மற்றும் சிரேஷ்ட பிரிவுகளுக்கான மெய்வல்லுநர் போட்டிகள் கடந்த திங்கட்கிழமை யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றது.
இதில் 16 வயதுப் பிரிவு 800 மீற்றர், 16 வயதுப் பிரிவு ஈட்டி எறிதல் ஆகியவற்றில் தங்கப்பதக்கமும் கோலூன்றிப் பாய்தலில் வெள்ளிப்பதக்கமும் திறந்த வயதுப்பிரிவு தட்டெறிதலில் வெண்கலப் பதக்கத்தையும் வென்றுள்ளனர்.
மேலும் கடந்த மாதம் இடம்பெற்ற மாகாண மட்டப் போட்டிகளில் 17 வயது எறிபந்து அணி சம்பியனானது 17 வயதுக்குட்பட்ட பளுதூக்கல் போட்டியில் 45 மற்றும் 55 கிலோ பிரிவில் 2 ஆம் இடத்தையும் 49 மற்றும் 59 கிலோ பிரிவில் 3 ஆம் இடத்தையும் பெற்றுள்ளது. அத்துடன் 20 வயதுக்குட்பட்ட பளுதூக்கல் போட்டியில் 71 கிலோ பிரிவில் 2 ஆம் இடத்தையும் 81 கிலோ பிரிவில் முதலாம் இடத்தையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-ரி2)

## பொன்னாலை மாயவன் இரதோற்சவம்



யாழ்ப்பாணம், செப். 9
வரலாற்றுச் சிறப்புமிக்க ஸ்ரீ பொன்னாலை வரதராஜப்பெருமானின் வருடாந்த பெருந்திருவிழாவின் இரதோற்சவம் கடந்த புதன்கிழமை அடியவர்கள் சூழ பக்திபூர்வமாக இடம்பெற்றது. அபிஷேக ஆராதனைகளைத் தொடர்ந்து மாயவன், ஸ்ரீதேவி, பூமாதேவி சமேதராக தேரில் ஆரோகணித்து பக்தர்களுக்கு அருள் பாலித்தார்.
இதன்போது பல பாகங்களிலிருந்தும் வருகைதந்த பக்தகோடிகள் எம்பெருமாருக்கு தூக்குகாவடி எடுத்தும் தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றினர். (ச-27)

## வடக்கு மாகாண



## விளையாட்டுப் போட்டிகள் கோலாகலமாக ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 9
வடக்கு மாகாணத்தின் 14ஆவது விளையாட்டு நிகழ்வுகள் கோலாகலமாக ஆரம்பமாகியுள்ளன.
யாழ்ப்பாண துரையப்பா விளையாட்டரங்கில் வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் தலைமையில் இந்த விளையாட்டுப் போட்டிகள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை ஆரம்பமாகின. நாளை ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறவுள்ளன.
யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 13 கல்வி வலயங்களிலுள்ள 651 பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் 5 ஆயிரம் விளையாட்டு வீரர்கள் பங்குபற்றவுள்ளனர் என மாகாண கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.
இதில் 8 விளையாட்டுகள் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டு 120 விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.
ஆரம்ப நிகழ்வில் வலயமட்ட விளையாட்டு நிகழ்வுகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பதக்கங்கள், வெற்றிச்சின்னங்களை வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் வழங்கி வைத்தார். நிகழ்வில் வடமாகாண பிரதம செயலர் எஸ்.எம்.சமன் பந்துலசேன, கல்வி அதிகாரிகள், விளையாட்டு அதிகாரிகள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ச-26-27)

## கடல்வளம் பேணல் பயிற்சி செயலமர்வு

கிளிநொச்சி, செப். 9
சர்வதேச கடற்கரையோர சுத்திகரிப்பு வாரத்தை முன்னிட்டு மெசிடோ நிறுவனத்தின் ஏற்பாட்டில் விழிப்புணர்வுச் செயற்றிட்டமும் பயிற்சிச் செயலமர்வும் கடந்த புதன்கிழமை பூநகரி பிரதேசசபை மண்டபத்தில் இடம்பெற்றது.
'கடல் வளங்களை பேண்தகு முறையில் பாதுகாத்தல்' எனும் தொனிப்பொருளில் இந்த விழிப்புணர்வு செயற்றிட்டம் நடைபெற்றது. நிகழ்வில் கடற்சூழல் பாதுகாப்பு அதிகாரசபை மற்றும் தேசிய உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை உத்தியோகத்தர்கள் வளவாளர்களாகப் பங்கேற்றனர். செயலமர்வில் பூநகரி பிரதேச சபை செயலாளர் தயாபரன், மெசிடோ நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் மற்றும் ஊழியர்கள், பூநகரி கடற்றொழில் சங்க சமாசத் தலைவர் ஜோசப் பிரான்சிஸ், கடற்றொழில் சங்க உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-113)



## மருத்துவ உபகரணங்கள் கையளிப்பு!




யாழ்ப்பாணம், செப். 9
பிரான்ஸ், இலங்கை மற்றும் இந்திய வர்த்தக சங்கத்தின் நிதியுதவியில் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனைக்கு ஒரு பில்லியன் ரூபா பெறுமதியான மின் அதிர்வு சிகிச்சை உபகரணம் வழங்கி வைக்கப்பட்டது.
தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையின் மருத்துவ அத்தியட்சர் எம். ம. ஜெமான்ஸ், தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையின் உளநல மருத்துவ நிபுணர் பேராசிரியர் எஸ். சிவயோகன், பிரான்ஸ், இலங்கை, இந்திய வர்த்தக சங்கத்தின் தலைவர் இராசையா சிறீதரன், உறுப்பினர்கள், மருத்துவர்கள், அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஒ-ரி2-27)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கற்கைநெறியின் ஆரம்ப நிகழ்வு!

யாழ், செப். 9 தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் 'உளவளத் துணை டிப்ளோமா கற்கை நெறியின்' ஆரம்ப நிகழ்வு இன்று சனிக்கிழமை இடம்பெறவுள்ளது. யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இன்று காலை 9 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாக வுள்ளன. (ம-100)

# மரண அறிவித்தல்



தோற்றம் 14 . 02 . 1937

மறைவு 05 . 09 . 2023

## செல்லையா தில்லையம்பலம்

(முன்னைநாள் வர்த்தகர் – நீர்கொழும்பு, மானிப்பாய்)

புங்குடுதீவு 7 ஆம் வட்டாரம் ஊரதீவைப் பிறப்பிடமாகவும், நீர்கொழும்பு மற்றும் மானிப்பாய் மேற்கு மானிப்பாய் ஆகிய இடங்களில் வசித்தவரும் தற்போது கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா தில்லையம்பலம் கடந்த (05.09.2023) செவ்வாய்க்கிழமை கனடாவில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - சின்னம்மா தம்பதிகளின் மூத்த மகனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், வேதவதியின் (சரோசா -கனடா) பாசமிகு கணவரும், சுஜீந்திரன் (கனடா), எழிலரசி (பிரான்ஸ்), ரவீந்திரன் (கனடா), ஆனந்தரசி (லண்டன்), கலையரசி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், சாமினி (கனடா), பாலகிருஷ்ணன் (பிரான்ஸ்), தர்சினி (கனடா), ஜெயக்குமார் (லண்டன்), திலகநாதன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, மனோன்மணி (பூமணி), தியாகராசா மற்றும் தியாக லிங்கம், இராசமணி (சிந்தாமணி) - காலஞ்சென்ற நாகேஸ்வரி (பாலாமணி) ஆகியோரின் அன்பு அண்ணாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.09.2023) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


சமுர்த்தி வங்கிலேன்,
மானிப்பாய் மேற்கு, மானிப்பாய்,
யாழ்ப்பாணம்

தகவல்:
செ. தியாகலிங்கம் (சகோதரன்)
சோ. சிந்தாமணி (சகோதரி)

076 866 4001

(CS/52025) AH-1

# மரண அறிவித்தல்



தோற்றம் 14 • 02 • 1948

மறைவு 07 • 09 • 2023

## ஐயாத்துரை குணரத்தினம்

(குகானந்தபவன் உணவகம்)

அளவெட்டி மேற்கு, அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் இல 11/12, குளப்பிட்டி ஒழுங்கை (காளிகோவில் வீதி) கொக்குவில் கிழக்கு, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை குணரத்தினம் நேற்றுமுன்தினம் (07.09.2023) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், வத்சலாதேவி (இந்து) இன் அன்புக் கணவரும், குணாலினி, மிதிலன் (பிரான்ஸ்), இன் அன்புத் தந்தையும், ஜீவதர்சன், தேனுஜா ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான பரிபூரணம், கிருஸ்ணசாமி மற்றும் சரஸ்வதி, காலஞ்சென்ற பாலரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற லிங்கசாமி, சுப்பிரமணியம் மற்றும் பரிமளகாந்தி, நாகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், ராகல்வியா, யாழமுதன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.09.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.11/12, குளப்பிட்டி ஒழுங்கை,
(காளிகோவில் வீதி),
கொக்குவில் கிழக்கு.

தகவல்:
குடும்பத்தினர்
077 226 9237

(cs 52024) (N-1)

# இரண்டாம் ஆண்டு நினைவில் .......



தோற்றம் 11 - 04 - 1943

மறைவு 25 - 07 - 2021

## திருமதி தவமணி விநாயகமூர்த்தி

அன்பு அம்மாவே !

ஒவ்வொரு கணமும் என்னை வையகத்தில் நன்றாக வாழ வைக்க வேண்டும் என்று உங்களை அர்ப்பணித்து சேவை செய்தீர்கள். உங்கள் சேவைக்காலம் முடிந்துவிட்டது என்று சொல்லாமல் சொல்லி "எல்லா ஆட்டமும் முடிந்தது, எனது பிள்ளை நல்லா கஷ்டப்படப் போகிறான்" என்று உறவுகளுக்கு எல்லாம் சொல்லி உயிர் விட்டீர்களே, இன்று நான் படும் வேதனைக்கு ஆறுதல் சொல்ல என் அம்மாவும் இல்லை. நான் பெற்றெடுத்த மகளும் இல்லை.

இன்று நான் பூமியிலே கனத்த இதயத்துடனும் கண்ணீர் சிந்தும் கண்களுடனும் சில கடமைகளை நிறைவேற்றுவதற்காக வாழ்ந்து கொண்டிருக்கிறேன். எல்லாம் வல்ல இறைவனின் சொற்படி எது நடக்க இருக்கிறதோ அது நடந்தே தீரும்.

உங்கள் ஆத்மா சாந்தியடையட்டும்.........

என்றென்றும் உங்கள் நினைவுடன்............

மகன், மருமகள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்



தோற்றம் 15 - 11 - 1994

மறைவு 01 - 09 - 2021

## திருமதி நிரோஷி புஸ்பகுமார்

பாசமிக்க மகளே !

உன்னைப் பிரிந்து ஈராண்டு சென்று விட்டது. இருண்டு போய் இருக்கிறது எமது சூழல் எல்லாம். உனது சிரிப்பு முகமும் சிரிப்பின் ஒலியும் ரீங்காரம் இட்டுக் கொண்டிருக்கின்றது. உனது மழலைகள் ஒவ்வொரு கணமும் கதைக்கும் ஒவ்வொரு வசனமும் எமக்கு புதுமையாக இருக்கின்றது.

இப்பூமியில் பலகாலம் நீ வாழ்வாய் சில காலம் எம்மை நீ வாழ வைப்பாய் என்று காவல் இருந்து உனக்காக நாம் கஷ்டப்பட்டோம் ஆனால், இன்று நிலைமை அனைத்தும் மாறிவிட்டது. இந்த மாற்றங்களின் கருவியாய் நீயானாய்.

அன்பு மகளே ! அணைந்தது எமது ஒளி விளக்கு. இன்று ஒலியும் இல்லை ஒளியும் இல்லை ஒழிந்துவிட்டது எல்லாமே. இருப்பினும் ஒவ்வொரு கணமும் உன்னை எம் மனக்கண் முன் நிறுத்தி வாழ்ந்து கொண்டிருக்கிறோம் நீ இல்லாத வையகத்தில் .........

உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

அம்மா, அப்பா, பிள்ளைகள்,
அண்ணன்மார், அண்ணிமார்.
077 7730 597

651/13, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்




திவ்ய மஹால் மண்டபம்
யாழ்ப்பாணத்தில் **06.09.2023**
அன்று நடைபெற்ற Helping Alliance
Social Awarding Ceremony
இன்போது பிரபல சமூக சேவையாளரும்
கல்விக் கொடையாளருமாகிய

## கலாநிதி இராசையா குவேந்திரநாதன்

அவர்களின் தன்னலமற்ற சமய,
சமூக பணிகளிற்காக
வட மாகாண ஆளுநர்
கௌரவ P.S.M.CHARLES அவர்களால் **"சாதனையாளர் விருது"**
வழங்கி கௌரவிக்கப்பட்டமையை பாராட்டுவதோடு அவர்களின் சேவை மென்மேலும்
தொடர நாமும் அவர்களை வாழ்த்துகின்றோம்.

**உரிமையாளரும், ஊழியர்களும்,**
**சிறி மீனாட்சி நகை அகம்**
**183, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

(cr.405360) (N.1)

# உலகை ஆளும் ஊடகத்துறைக்குள் நீங்களும் பிரவேசிக்க விருப்பமா ?




பயிற்சிகள் யாவும் இலவசமாகவே நடத்தப்படும்

## உதயன் ஊடகப் பயிற்சி - 2023

- உங்கள் ஒவ்வொருவரையும் பட்டைதீட்டி ஊடகத்துறையில் மிளிரச்செய்வதற்கு "உதயன்" தயாராகின்றான்.
- உதயனின் இந்தப் பயணத்துடன் கைகோர்க்க உங்களுக்கு விருப்பமா?
- அச்சு, இலத்திரனியல் ஊடகத்துறையின் அடிப்படைகள் மூத்த ஊடகர்கள், பல்கலை விரிவுரையாளர்களால் போதிக்கப்படும்.
- ஒரு மாத காலம் பயிற்சி மற்றும் ஊடகப்பணி தொடர்பான அனுபவங்களைப்பெற முடியும். அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் வழங்கப்படும் மற்றும் பயிற்சி முடிவில் திறமையானவர்களுக்கு வேலைவாய்ப்பிற்கான சந்தர்ப்பம் ஏற்படுத்திக்கொடுக்கப்படும்.
- 18 - 30 வயதுக்கு இடைப்பட்ட இரு பாலரும் விண்ணப்பிக்க முடியும்.
- பயிற்சிகள் யாவும் யாழ்ப்பாணத்திலுள்ள உதயன் தலைமை அலுவலகத்தில் வார நாட்களில் நடைபெறும்.

உங்கள் சுயவிவரக் கோவையை 10.09.2023 இற்கு முன்னர் **0767374444** என்ற வட்ஸப் இலக்கத்துக்கு அல்லது **digital@uthayan.com** மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

# 'செம்மணி' நினைவேந்தல்



தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி யின் ஏற்பாட்டில் செம்மணிப் படுகொலையின் 27 ஆவது வருட நினைவேந்தல் நிகழ்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை யாழ். செம்மணி வளைவுக்கு அருகில் கட்சியின் செயற்பாட்டாளர் ச.சுதாகரன் தலைமையில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது. கிராமிய உழைப்பாளர் சங்கத் தலைவர் என். இன்பம் செம்மணியில் படுகொலை செய்யப்பட்டவர்கள் ஞாபகார்த்தமாக உருவாக்கப்பட்ட நினைவுச் சின்னம் முன்பாக நினைவுச் சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தினார். அதனைத் தொடர்ந்து படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு ஒரு நிமிட அக வணக்கத்துடன் மலரஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது. மேற்படி நினைவேந்தல் நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன், கட்சியின் செயலாளர் ந. காண்டீபன், கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் தீபன் திலீசன், சாவகச்சேரி நகரசபையின் முன்னாள் உறுப்பினர் ஞா.கிஷோர், கட்சியின் செயற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

1996 ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்தினரால் கூட்டுப் பாலியல் வன்புணர்வுக்குட்படுத்தி படுகொலை செய்யப்பட்ட பாடசாலை மாணவி கிருஷாந்தி குமாரசாமி உள்ளிட்டவர்களை நினைவு கூர்ந்து மலரஞ்சலி செலுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ஒ-ரி2-66)

## யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் [வ-து]

**விற்பனை உதவியாளர் பதவி குறி இல 308/17மற்றும் காவலாளி பதவி குறி இல 315/16 என்னும் விளம்பரத்தின் திருத்தம்**

08.09.2023 ம் திகதிய உதயன் பத்திரிகையில் விளம்பரம் செய்யப்பட்ட விற்பனை உதவியாளர் பதவி குறி இல 308/17 மற்றும், காவலாளி பதவி குறி இல 315/16 என்னும் விளம்பரத்தின் 2 வது விடயமான வயதெல்லை விடயத்தில் **18-45 எனத் திருத்தி வாசிக்கவும்**

**தலைவர்**
**யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்(வ-து)**
**இல 127, காங்கேசன்துறை வீதி,**
**யாழ்ப்பாணம்.**

## சாவகச்சேரி நகராட்சி மன்றம் ஆதனப் பெயர்மாற்றம்

சாவகச்சேரி நகராட்சிமன்றத்திற்குட்பட்ட வட்டாரம் 08, கச்சாய் வீதி 278/6 (290/6 பழையது) என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் அப்புக்குட்டி மகாலிங்கம், உரிமைகோருபவர் A.பரமசாமி என்னும் பெயரில் ஆதனவரிப்பெயரேட்டில் காணப்படுகிறது.

விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்பட்ட ஆரம்ப உறுதியின் பிரகாரம் குறித்த ஆதனத்தினை விடத்தற்பளை, மிருசுவில் விஜயரத்தினம் உமாசுதன் மற்றும் நுணாவில் மத்தி, சாவகச்சேரியை சேர்ந்த விஜயரத்தினம் பிரபாசுதன் ஆகியோர் பிரசித்த நொத்தாரிசு நித்தியானந்தன் கேசாந் (LLB) அவர்கள் மூலம் 314 இலக்க 26.09.2018ம் திகதியில் நிறைவேற்றிய வெளிப்படுத்தல் உறுதிமூலம் பெற்றுள்ளனர்.

மேலும் இவ் வெளிப்படுத்தல் உறுதியில், வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் தென்மராட்சி பகுதி தென்மராட்சி பிரதேச செயலாளர் பிரிவும் சாவகச்சேரி நகர சபையில் கோவில்பற்று, சாவகச்சேரி இறை J/301 கிராம அலுவலர் பிரிவில் உள்ள "நட்டாலடி" நிலப்பரப்பு 25 குளி 08.19 இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் சி.சர்வேஸ்வரன் அவர்களால் 18.08.2018ம் திகதி அளந்து விஸ்தர்க்கப்பட்ட 693ம் இலக்க நில அளவைப்படத்தில் துண்டு 3 என சுட்டப்பட்ட நிலப்பரப்பு 08 குளி 08.73 எனவும் இதற்கெல்லைகளாக கிழக்கு தேவானந்தன் அனிந்திராவின் ஆதனம், வடக்கு ஒழுங்கை, மேற்கு 693ம் இலக்க நில அளவைப்படத்தில் விபரிக்கப்பட்டதன் பிரகாரம் துண்டு 2, தெற்கு கடற்கரை தரிசு நிலம் என ஆதன விபரம் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் மேற்படி ஆதனமானது தமது பிரதா காலம்சென்ற குருசாமி விஜயரத்தினத் தின் பூட்டனார் வல்லிபுரம் அப்புக்குட்டிக்கு சொந்தமாக இருந்தது என்றும், குறித்த ஆதனத்தினை அவர் பாராதீனம் செய்யாது விட்டிறக்க குறித்த ஆதனம் அவரின் மூன்று பிள்ளைகளான அப்புக்குட்டி குருசாமி அப்புக்குட்டி மகாலிங்கம் அப்புக்குட்டி பரமசாமி என்போர்க்கு பிதாவழி முதுசமாகவந்தடைந்தது என்றும் குறித்த அப்புக்குட்டி குருசாமி தனது பாகத்தை பாராதீனம் செய்யாது விட்டிறக்க அவரின் சொரியலான 1/3 பங்கு அவரின் வாரிசுகளான எம்மை வந்தடைந்தது என்றும், மேலும் முழு ஆதனமும் அதன் சொரியற் பங்காளர்களின் இணக்கத்துடன் (5891ம் இலக்க மத்தியஸ்த சபையின் இணக்கம்) பிரிவிடல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று வெளிப்படுத்தப்பட்டு உறுதி நிறைவேற்றியுள்ளனர்.

பின்னர் நுணாவில் மத்தி, சாவகச்சேரியை சேர்ந்த விஜயரத்தினம் பிரபாசுதன் என்பவரால் அவ்வூரைசேர்ந்த தனது தாயாகிய விஜயரத்தினம் கைம்பெண் மகேஸ்வரிக்கு, பிரசித்த நொத்தாரிசு நித்தியானந்தன் கேசாந் (LL.B) அவர்கள் மூலம் 331 இலக்க 24.10.2018 ம் திகதியில் நிறைவேற்றிய நன்கொடை உறுதிமூலமும், வேலாயுதம் வீதி நுணாவில் மத்தி, சாவகச்சேரியை சேர்ந்த மாசிலாமணி சுதர்சன், சுதர்சன் பெண் விஜயந்தினி, விஜயரத்தினம் விஜயசித்திரா ஆகியோர் பிரசித்த நொத்தாரிசு நித்தியானந்தன் கேசாந் (LL.B) அவர்கள் மூலம் 592 இலக்க 27.06.2020ம் திகதியில் நிறைவேற்றிய உரித்திழத்திலும் உறுதிப்படுத்தலும் உறுதி மூலமும், நுணாவில் மத்தி, சாவகச்சேரியை சேர்ந்த விஜயரத்தினம் உமாசுதன் பிரசித்த நொத்தாரிசு நித்தியானந்தன் கேசாந் (LL.B) அவர்கள் மூலம் 593 இலக்க 27.06.2020ம் திகதியில் நிறைவேற்றிய நன்கொடை உறுதி மூலமும் இவ்வாதனம் சென்றடைந்துள்ளது.

தற்போது விஜயரத்தினம் கைம்பெண் மகேஸ்வரி இவ்வாதனத்தை தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனம் தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிக்க இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த நாளிலிருந்து 30 நாட்களுக்குள் நேரடியாகவோ தபாலிலோ சட்டபூர்வ ஆவணங்களுடன் எழுத்து மூலம் தெரிவிக்கமுடியும். வெளிநாடுகளில் வசிப்பவர்களானால் இங்குள்ள உறவினர்களூடாக தெரிவிக்கலாம். ஆட்சேபனை எதுவும் தெரிவிக்காதபட்சத்தில் மேற்குறித்த ஆதனத்திற்கான உரிமையாளரது பெயருக்குப்பதிலாக விண்ணப்பதாரரின் பெயரை உட்புகுத்த நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வுட்புகுத்தல் தொடர்பாக ஏற்படும் எவ்வித பிரச்சினைகளுக்கும் நகராட்சிமன்றம் பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**செயலாளர்,**
**நகராட்சி மன்றம், சாவகச்சேரி.** (cs 50552) (N-1)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

சிவசேனை சிவத்தொண்டர்

## N.P.சிறிந்திரன்




**கடந்த 17.07.2023 இல்**
**பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில், கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீடத்தினால் பொதுச் சட்டத்துறையில்**
**(Di.in.public law - Merit Pass)**
வழங்கப்பெற்ற பட்டத்தை முன்னிட்டு.
மனதார வாழ்த்திப் பாராட்டுகிறோம்.
அவர் மேலும் சட்டத்துறையில்
முன்னேறி சைவத்தையும் தமிழையும்
காக்கப் பணிசெய்ய சிவனருள் வேண்டி
பிரார்த்திக்கின்றோம்.

**தென்மராட்சி நண்பர்கள் வட்டம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குளவிக்கொட்டுக்கு இலக்காகி ஐவர் மருத்துவமனையில்

யாழ்ப்பாணம், செப். 9

யாழ்ப்பாணம் கிழக்கு, பலாலிப் பகுதியில் குளவி கொட்டுக்கு இலக்காகி ஐந்து பேர் அச்சுவேலி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று இடம் பெற்றுள்ளது.

அவர்களில் ஒருவர் மேலதிக சிகிச்சைகளுக்காக, யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ம-23)


## 45 ஆம் நாள் நினைவுதின அழைப்பும் நன்றி நவிலலும்

கடந்த (28.07.2023) வெள்ளிக் கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்த எமது மகள்



**செல்வி கௌசி சற்குணரட்னம்**

(BSc , Hons in Surveying Sciences Special in Surveying Geodesy)

மூளாய் செபமாலை ஆலயத்தில் காலை 7.00 மணிக்கு அவர்களின் நினைவு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, நாளை (10.09.2023) ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லதில் மதியபோசன நிகழ்வு நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

**இவ் அறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகைதருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

மேலும் அன்னாரின் மறைவுச் செய்தியறிந்து நேரிலும், தொலைபேசியூடாகவும் அனுதாபம் தெரிவித்த உள்நாட்டு, வெளிநாட்டு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும், துண்டுபிரசுரம், பதாகைகள் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம். (cs. 52022) N..1 076 310 8654 குடும்பத்தினர்



## 02 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 02 . 09 . 1949

பரன் பாதத்தில் 09 . 09 . 2021

**அமரர் இராஜரட்ணம் ஸ்ரீபாலரட்ணம்**

(ஓய்வுபெற்ற இலங்கை வங்கி வாடிக்கையாளர் சேவை முகாமையாளர்)

"நல்ல போராட்டத்தைப் போராடினேன் ஓட்டத்தை முடித்தேன் – விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன். இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது" (2தீமோ 4:7 8)

டடா, நீங்கள் எங்களை விட்டுப்பிரிந்து 2 வருடங்கள் ஆனாலும் உங்கள் அன்பு நினைவுகளுடனே வாழ்ந்து கொண்டிருக்கிறோம்

என்றும் நீங்கா நினைவுகளுடன்
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் தேவன், பப்சி

58, வேம்படி வீதி, யாழ்ப்பாணம். (CS/51982)AH-1

(CS/51982)AH-1



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

கலைப்பிரிவில் யாழ். மாவட்ட நிலையில் **முதலாம், ஆறாம்** இடங்களையும் ஐந்து 3A பெறுபேறுகளை தனதாக்கிக் கொண்டது **வரணி நிதி அக்கடமி** மற்றும் **சாவகச்சேரி லைசியம் உயர்கல்லூரி.** கல்வி கற்ற 45 மாணவர்களில் 25 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்பினை பெற்று எமது கல்வி நிலையங்களுக்குப் பெருமையை சேர்த்துத் தந்த இம் மாணவச் செல்வங்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் – நிர்வாகி, ஆசிரியர்கள்


R. சுவர்க்கா-3A (1st Rank)


T. ஜதுசா - 3A (6th Rank)


N. சரஸ்வன்ஜா-3A 61


S.சாதனா-3A 76

05.S. கனிவிழி 3A - 134
06.N. பிரகாஷ் 2AB - 80 (கிளி)
07.D. கிருத்திகா A2B - 89
08.Y. ரட்சகன் A2B
09.K. கயூத் 2AB
10.B. தர்மிகா 2AC
11.B. மயூரி 2AC
12.T. ரிசாந்தினி 2AB
13.B. சுதர்சினி A2B
14.N. சிவர்ணா A2B
15.U. சுருதிகா A2B
16.K. பிரியங்கா ABC
17.P. வீஸ்னுகி ABC
18.S. கலைவினோதன் ABC
19.S. தேனுஜா 3B
20.S. சுபிதா ABC
21.S. சௌமியா A2C
22.S. வேணுசா ABS
23.K. பிரியங்கா A2C
24.R. ஜெயமாலினி A2C
25.F. பிரியதர்சினி A2C
26.J. லிந்துஜன் ACS
27.N. துவாரகன் ABC
28.M. மயூரன் ACS
29.K. கம்சிகன் A2S
30.T. ததுஸ்ரன் ACS

Congratulations

* 2023 A/L Day classes
* 2023 A/L Paper classes
* 2024 A/L மீட்டல் வகுப்புகள்
* 2025 A/L 2nd Batch Admissions

எமது கல்வி நிறுவனத்தில் ஆரம்பமாக உள்ளது.

இடம்

லைசியம் உயர் கல்லூரி
Hensman lane, Dutch road, Chavakacheri.

நிதி அக்கடமி
(வரணி மத்திய கல்லூரி முன்பாக)

காலம்

ஞாயிற்றுக்கிழமை (17.09.2023) காலை 09 மணிக்கு ஆரம்பமாகும்.

Contact : 077 6962 986, 077 3781 264

S.B. ஞானநிரோஜன் (நிர்வாகி)



## மரண அறிவித்தல்



**திருமதி ரேணுகா ஸ்ரீஸ்கந்தராஜா**

கொட்டாவத்தை, கல்வளை, சண்டிலிப்பாயை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ரேணுகா ஸ்ரீஸ்கந்தராஜா அவர்கள் நேற்று (08.09.2023) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார், ஸ்ரீஸ்கந்தராஜா (ஓய்வுபெற்ற ஆய்வுகூட உதவியாளர், யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி) அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் (ஓய்வு பெற்ற புகையிரத நிலைய அதிபர்) விசாலாட்சி ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சபாரட்ணம் சிந்தாமணிப்பிள்ளை (வட்டுக்கோட்டை) ஆகியோரின் அன்பு மருமகளும், பாலச்சந்திரன் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), காலஞ்சென்ற பாலகெங்காதரன் மற்றும் சாந்தினி ஆகியோரின் அன்புச் சகோதரியும், இலங்காதேவி, இளங்கோ (ஓய்வு பெற்ற எழுதுநர், உடுப்பிட்டி ப.நோ.கூ.ச), ஆனந்தராஜா, சிவராஜா, லிங்கராஜா, மனோகரராஜா, லீலாவதி, பத்மாவதி மற்றும் காலஞ்சென்றவர்களான செல்வராஜா, ஜெயராஜா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (08.09.2023) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சண்டிலிப்பாய் சங்கம்புலவு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருந்தூரில் தேரர், சச்சி புத்தவழிபாடு

# விசாரணைகள் தாமதத்தால் ஒத்திவைக்கப்பட்டது வழக்கு



முல்லைத்தீவு, செப். 9

**குருந்தூர்மலையில் புத்தர் சிலையை வைத்து கல்கமுவ சந்தபோதிதேரர் மற்றும் மறவன்புலவு சச்சிதானந்தம் உள்ளிட்ட குழுவினர் வழிபட்டமை தொடர்பில் மேலதிக விசாரணை மேற்கொள்ள பொலிஸார் காலஅவகாசம் கோரியதையடுத்து வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.**

குருந்தூர்மலையில் கடந்த ஜூலை மாதம் கல்கமுவ சந்தபோதி தேரர், மறவன்புலவு சச்சிதானத்தம் உள்ளிட்ட குழுவினர் புத்தர் சிலையைக் கொண்டுசென்று வைத்து பூசை வழிபாடுகள் மேற்கொண்டனர்.

அங்கு வழிபாடுகளைச் செய்யவோ மதக்கட்டுமானங்களை மேற்கொள்ளக்கூடாதென நீதிமன்றால் தடை விதிக்கப்பட்டிருக்கும் நிலையில் அவர்கள் எவ்வாறு வழிபாடுகளை மேற்கொள்ளலாம் எனக் கூறி ரவிகரன், பீற்றர் இளஞ்செழியன் ஆகியோரால் வழக்கு தொடரப்பட்டது.

இந்த வழக்கு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை முல்லைத்தீவு நீதிமன்றில் எடுக்கப்பட்டது.

இதன்போது வழக்குத் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொள்ள பொலிஸார், நீதிமன்றிடம் காலஅவகாசம் கோரிய நிலையில் வழக்கு நவம்பர் மாதம் 23ஆம் திகதி தவணையிடப்பட்டது.

இதேவேளை - தமக்கெதிராக எதிர்த்தரப்புகள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகளை மேற்கொள்ளும் போது பொலிஸார் எமது முறைப்பாடுகளை விசாரணை செய்ய இழுத்தடிப்புச் செய்கின்றனர் என்று மாகாணசபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் விசனம் தெரிவித்துள்ளார்.

(ச-246)

## உள்ளூர் உற்பத்திப்பொருள் விற்பனையும் உணவுத் திருவிழாவும்

நெல்லியடி, செப். 9

பருத்தித்துறை, கரவெட்டி பிரதேச செயலகங்களின் இணைந்த ஏற்பாட்டில் உள்ளூர் உற்பத்திப் பொருள்களின் விற்பனைச் சந்தையும் உணவுத் திருவிழாவும் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நெல்லியடி மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் கைவினைப் பொருள்கள், தைத்த ஆடைகள், உள்ளூர் இயற்கை உணவுப் பொருள்கள் மற்றும் விவசாயத் திணைக்களத்தின் நாற்றுக்களின் விற்பனையும் இடம்பெற்றது. இதில் வடமராட்சிக்குட்பட்ட பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள், வடமராட்சி வடக்கு பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கரவெட்டி பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு பொருள்களைக் கொள்வனவு செய்ததை அவதானிக்க முடிந்தது.

(ஒ-ரி3-27)




உதயன் ஊடக அனுசரணையில்

## ஏ.ரி.எல். பிறீமியர் லீக் ஆரம்பமாகிறது இன்று

யாழ்ப்பாணம், செப். 9

உதயனின் ஊடக அனுசரணையில் ஏ.ரி.எல். பிறீமியர் லீக் கிரிக்கெட் தொடர் அச்செழு வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் இன்று கோலாகலமாக ஆரம்பமாகின்றது.

இதன்படி இன்று இடம்பெறும் முதலாவது போட்டியில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து அச்செழு சைற்றேர்ஸ் அணி மோதவுள்ளது. தொடர்ந்து இரண்டாவது போட்டியில் மயிலங்காடு ஞானமுருகன் அணியை எதிர்த்து சிறுப்பிட்டி கலைமகள் அணி மோதவுள்ளது. தொடர்ந்து மூன்றாவது போட்டியில், அச்செழு சைற்றேர்ஸ் அணியை எதிர்த்து அச்செழு பவர் கிற்றர்ஸ் அணிமோதவுள்ளது. நான்காவது போட்டியில் றோயல் அணியை எதிர்த்து ஞானமுருகன் அணி மோதவுள்ளது. ஐந்தாவது போட்டியில் கலைமகள் அணியை எதிர்த்து உரும்பிராய் பைங்கரன் அணி மோதவுள்ளது. ஆறாவது போட்டியில் அச்செழு பவர் கிற்றர்ஸ் அணியை எதிர்த்து ஊரெழு றோயல் அணி மோதவுள்ளது. முதல் நாளின் இறுதிப்போட்டியில் பைங்கரன் அணியை எதிர்த்து ஞானமுருகன் அணி மோதவுள்ளது.

இந்தத் தொடரின் பிரதான அனுசரணையாளராக மென்ஸ் மார்ட் நிறுவனம் செயற்படுகின்றது. தொடரில் களமிறங்கும் ஊரெழு றோயல் கழகத்துக்கான சீருடை அறிமுக நிகழ்வு நேற்றையதினம் ஊரெழு பொதுமைதானத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் உதயன்குழுமத்தலைவரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான ஈ.சரவணபவன் கலந்துகொண்டார்.

(ம-125)

## பேசாலை காற்றாலைக்கு மக்கள் காணி சுவீகரிப்பு!

### உரிமையாளர்கள் போர்க்கொடி

மன்னார், செப். 9

மன்னார் - பேசாலை காற்றாலை திட்டத்துக்கான இரண்டாம் கட்டச் செயற்பாடாக தனியார் காணிகள் அபகரிக்கப்பட்டு - அடையாளப்படுத்தப்பட்டு அறிவுறுத்தல் பலகை காட்சிப்படுத்தப்பட்டுள்ளமைக்கு காணி உரிமையாளர்கள் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.

மன்னார் காற்றாலை செயற்றிட்டத்துக்கு காணி அமைச்சின் பணிப்புரைக்கமைய கடந்த புதன்கிழமை மன்னார் பிரதேச செயலக அதிகாரிகளால் காணிகள் அடையாளப்படுத்தப்பட்டு மும்மொழி அறிவுறுத்தல் விளம்பரம் மக்கள் பார்வைக்கு காணியில் ஒட்டப்பட்டது.

அதனை அறிந்த காணி உரிமையாளர்கள் மற்றும் பேசாலை பங்குத் தந்தை அருட்பணி அன்ரன் அடிகளார் உட்பட ஊர் மக்கள் இணைந்து சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று காணி அபகரிப்புக்கு எதிராக குரல் எழுப்பினர்.

மீன் வளம் மற்றும் கடல் வளங்களை அழிக்கும் வகையில் மன்னாரில் காற்றாலை மின் செயற்றிட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

மக்களின் தொடர் எதிர்ப்புக்கு மத்தியிலும் தொடர்ச்சியான கனிய மணல் அகழ்வு மற்றும் ஆய்வுகள் பணிகள் இடம்பெற்றுவருகின்றன.

அதன் இரண்டாம் கட்டமாக தற்போது மக்களின் காணிகள் சுவீகரிக்கப்படுகிறது. இத்தகைய காணி அபகரிப்பு சட்டத்துக்கு முரணானதாகும் என்று எதிர்ப்பு வெளியிட்டனர்.

இதுதொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரியொருவர் தெரிவிக்கையில்;

மன்னார் காற்றாலை மின் செயற்றிட்டத்தில் புதிய காற்றாலைகள் பொருத்தல் மற்றும் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை நிர்மாணித்தல் ஆகியவற்றுக்கே இந்தக் காணிகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. காணி அமைச்சின் பணிப்புரைக்கமையவே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது.

இதுதொடர்பில் காணி உரிமையாளர்கள், தங்கள் காணிகளை உரிமைகோரியோ அல்லது விருப்பு, வெறுப்புகளையோ மன்னார் பிரதேச செயலருக்கு எழுத்து மூலமாகத் தெரிவிக்கும் பட்சத்தில் உயர்மட்டம் இதுதொடர்பில் பரிசீலிக்கும் - என்றார்.

(ச-60)

## கைது

மருதங்கேணி, செப். 9

வத்திராயன்தெற்கு கிராமத்தில் நேற்று முன்தினம் வியாழக் கிழமை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது வீடொன்றில் 4 பரல் கோடா உள்ளிட்ட உபகரணங்களுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சட்டவிரோதமான முறையில் கசிப்பு உற்பத்தி இடம்பெற்று வருவதாக மருதங்கேணி பொலிஸ் விசேட புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே இந்தக் கைது இடம்பெற்றுள்ளது. (ஒ-ரி3-100)

## போட்டி நிகழ்வுகள்

ஊர்காவற்றுறை, செப். 9

2023 ஆம் ஆண்டுக்கான தேசிய வாசிப்பு மாதத்தை யொட்டி ஊர்காவற்றுறை பிரதேசசபையின் எழுவைதீவு பொது நூலகத்தின் ஏற்பாட்டில் நூலக மண்டபத்தில் போட்டிகள் இடம்பெற்றன.

முன்பள்ளி சிறுவர்கள், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், 17 வயதுக்கு மேற்பட்டவர்கள், 40 வயதுக்கு மேற்பட்டோர் மற்றும் முன்பள்ளி சிறார்களின் பெற்றோர் என அனைவருக்கும் போட்டிகள் நடத்தப்பட்டன.

(ஒ-ரி-29)

## வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த (11.08.2023) வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவி



அமரர்
**இராசதுரை ஞானாம்பிகை**

அவர்களின் வீட்டுக்கிருத்தியக்
கிரியைகள் நாளை (10.09.2023)
ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30
மணியளவில் எமது இல்லத்தில்
நடைபெறவிருப்பதால் அத்தருணம்
தாங்களும் வருகை தந்து
கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து
நடைபெறும் மதிய போசனத்திலும்
கலந்துகொள்ளுமாறு அன்புடன்
அழைக்கின்றோம்.
இதனை தனிப்பட்ட அழைப்பாக
ஏற்றுக்கொள்ளவும்.

குடும்பத்தினர்.

இராமலிங்கம் வீதி,
கல்வயல், சாவகச்சேரி.

(CS 25999) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உதயன் ஊடக அனுசரணையில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் 'ஸரிகமப 'இசை நிகழ்ச்சி வவுனியா கலாசார மண்டபத்தில் நேற்று இரவு இடம்பெற்றது. (அ-ஒ.5)

### கெஹலியவுக்கு...

நாட்டில் நிலவும் சுகாதார நெருக்கடிக்கு கெஹலியவே காரணம் என்றும், அத்துடன் நாட்டுக்குள் தரமற்ற மருந்துகள் இறக்குமதி செய்யப்பட்டு மோசடி இடம்பெற்றுள்ளது என்று வலியுறுத்தியும் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது.

மூன்று நாள்கள் விவாதம் நடத்தப்பட்ட பின்னர் நேற்று இது தொடர்பில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. பிரேரணைக்கு ஆதரவாக (கெஹலியவுக்கு எதிராக) 73 வாக்குகளும், பிரேரணைக்கு எதிராக (கெஹலியவுக்கு ஆதரவாக) 113 வாக்குகளும் செலுத்தப்பட்டன. 38 பேர் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை. இதையடுத்து 40 வாக்குகளால் நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோற்கடிக்கப்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தி, ஜே.வி.பி., தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் முற்போக்கு கூட்டணி, முஸ்லிம் காங்கிரஸ், மக்கள் காங்கிரஸ், டலஸ் அணி, விமல் அணி என்பன பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தன. பொதுஜன பெரமுன, ஐக்கிய தேசியக் கட்சி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ் உட்பட அரச பங்காளிக்கட்சிகள் எதிராக வாக்களித்தன. (அ-ம-44)

### உ/த.....

இவ்வாறு உயிரிழந்தவராவார்.

கடந்த 6ஆம் திகதி புதன்கிழமை அவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார்.

பரீட்சையில் தான் எதிர்பார்த்த முடிவு கிட்டவில்லை என்பதால் அந்த மாணவன் விரக்தியில் இருந்துள்ளார் என்றும், தவறான முடிவெடுத்து உயிரிழக்க இதுவே காரணம் என்பதும் இறப்பு விசாரணைகளின் அடிப்படையில் தெரியவந்துள்ளது. (அ-ம-60)

### திரிபோலி...

நடத்தப்பட வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'சனல் - 4 தொலைக்காட்சியில் திரிபோலி குழு தொடர்பில் பேசப்பட்டது. லசந்த விக்கிரமதுங்கவை இந்தக் குழுதான் கொலை செய்துள்ளது. இந்தக்குழு தொடர்பில் தற்போதைய ஜனாதிபதிகூட முன்பு எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இந்த கொலைப்படையில் இருந்தவர் தான் ஆசாத் மௌலானா. இந்தக் குழுவுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தலைமை வழங்குவது பாரதூரமான விடயமாகும். பிள்ளையான் தான் தலைமை வழங்குகின்றார். அந்தக் குழு இன்னும் இயங்குகின்றது.

பிரிட்டன் தூதரகத்துக்கு முன்னால் நேற்று (நேற்று முன்தினம்) போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது. புலனாய்வு அதிகாரிகள்தான் இந்தப் போராட்டத்தை ஏற்பாடு செய்துள்ளனர். புலனாய்வுப் பிரிவு பிரதானியான ஷாலேவுக்கு எதிராகக் குற்றச்சாட்டு உள்ளது. அவரைப் பதவியில் இருந்து உடன் இடைநிறுத்தி கட்டாய விடுமுறையில் அனுப்பிவிட்டே இது தொடர்பில் விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும். ஆனால் அது நடப்பதாகத் தெரியவில்லை.

பிள்ளையான் தொடர்பில் நான் கதைக்கின்றேன் என்பதற்காக என் மீது அவருக்கு கோபம் ஏற்படலாம். ஆயுதக்குழுவொன்றை வழிநடத்துபவர் நாடாளுமன்றத்தில் இருப்பது பாரதூரமான விடயமாகும். எனவே, இது தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும். அந்த ஆயுதக்குழு தொடர்பில் உண்மை கண்டறியப்பட வேண்டும்' - என்றார். (அ-ம-44)

### அனைத்து...

பட்டவிவகாரத்தில் முன்னெடுக்கப்பட்ட அனைத்து விசாரணைகளும் இன்றுடன் நிறைவடையும் என்று மருத்துவமனை வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

இந்த விசாரணை அறிக்கைகள் சுகாதார அமைச்சுக்கு இன்றையதினம் அனுப்பிவைக்கப்படவுள்ளன. இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள, சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் அடுத்துவரும் தினங்களில் வெளிப்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-ம-26)

### மனிதப்...

குறிக்கப் பயன்படுத்தப்பட்டவை என்று நம்பப்படும் 'இலக்கங்கள்' காணப்பட்டுள்ளன. அத்துடன் துப்பாக்கி ரவைகள் சிலவும் நேற்று மீட்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வின் மூன்றாம் நாள் நடவடிக்கைகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன. நேற்றுமுன்தினம் புதைகுழிக்குள் மனித எச்சங்களும், துப்பாக்கி ரவைகளும் அதுசார் கூறுகளும், பச்சை உடைகளும் காணப்படுவதாக அறிக்கையி[illegible] இந்த நிலையில், நேற்றையதினம் முன்னெடுக்கப்பட்ட அகழ்வு நடவடிக்கைகளின்போது இவை முற்றாக மீட்கப்பட்டன. மீட்கப்பட்ட மனித எச்சங்களில் பெண்களின் உள்ளாடைகளும் காணப்படுகின்றன. உடைகளில் 3204 மற்றும் 3174 என்று இலக்கமிடப்பட்டுள்ளன. அத்துடன் இரண்டு மனித எச்சங்களிலும் துப்பாக்கி ரவைகள் இருந்தன.

மனித எச்சங்களும் சான்றுப் பொருள்களும் சட்டமருத்துவ அதிகாரியால் பொதியிடப்பட்டு பகுப்பாய்வுக்காக எடுத்துச் செல்லப்பட்டன. (அ-ம-246)

### நாடாளுமன்றில்...

இதற்காக எதிர்வரும் 21 மற்றும் 22ஆம் திகதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இது தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை பிரேரணையை எதிர்க்கட்சி கொண்டுவரவுள்ளது.

சனல் - 4 வீடியோ உட்பட உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் விவாதிக்க 3 நாள்கள் விவாதத்தை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

*(தொடர்புடைய செய்தி பக்.5 இல்)*

### நீதிமன்றத்தின்...

யுறுத்தியுள்ளார். நாடாளுமன்றத்தில் நேற்று கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உயிர்த்தஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பல்வேறு கருத்துகளை குறிப்பிட்டுள்ளார்கள். நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் நீதிமன்றக் கட்டமைப்பு மற்றும் நீதிபதிகள் தொடர்பில் பாரதூரமான குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர் பிள்ளையானை விடுதலை செய்ய நீதிமன்றத்துக்குள் சூழ்ச்சி இடம்பெற்றுள்ளது. உயர்நீதிமன்ற நீதியரசர் நவாஸ், உயர்நீதிமன்ற நீதியரசர் வெங்கப்புலி, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி தேவிகா அபேரத்ன ஆகியோர் இவ்விடயத்தில் தொடர்புபட்டுள்ளனர் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் குற்றச்சாட்டைத் தொடர்ந்து நீதிமன்றக் கட்டமைப்பு மீதான மக்களின் நம்பிக்கை பாரதூரமான அளவுக்கு பாதிக்கப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது. இது விடயத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

'சனல் 4' வெளியிடாத பல தகவல்கள் தன்னிடம் உள்ளதாக சாணக்கியன் இராசமாணிக்கம் குறிப்பிட்டுள்ளார். ஆகவே சாட்சியங்கள் காணப்படுமாயின் அவர் குற்றப்புலனாய்வுப் பிரிவிடம் அவற்றைச் சமர்ப்பித்து விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். நீதிமன்றத்தை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் கருத்துரைப்பதை தவிர்த்துக் கொள்ள வேண்டும். நீதிபதிகளை அவமதித்து எதைச் சாதிக்கப் போகிறார்கள் என்பது அறியாததொரு விடயமாகவுள்ளது - என்றார். (அ-ம)

### சிமெந்துத்....

845 கிலோகிராம் இரும்பு திருடப்பட்டுள்ளது என்று சிமெந்துத் தொழிற்சாலையின் பாதுகாப்ப ஊழியர்களால் காங்கேசன்துறைப் பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது.

காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் இரவு இந்த முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது. அன்றையதினம் குறித்த சிமெந்துத் தொழிற்சாலைக்குள் நுழைந்து இரும்பு திருட முற்பட்ட ஆறு பேர் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட சிலமணிநேரத்தில் இந்த முறைப்பாடு பாதுகாப்பு ஊழியர்களால் வழங்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையில் கடந்த சில மாதங்களாகவே இரும்புத் திருட்டுக்கள் அதிகரித்திருந்தன. இது தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரும் விசாரணைகளைத் துரிதப்படுத்தியிருந்தனர். சிமெந்துத் தொழிற்சாலைக்கு பரிச்சயமான குழுவொன்றும் இராணுவத்தினரும் இணைந்து இரும்பு திருட்டில் ஈடுபட்டனர் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டது. இவ்வாறானதொரு பின்னணியில் இந்த முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

### கனடா....

யப்பட்டுள்ள நிலையில் இது தொடர்பில் யாழ்ப்பாணம் மாவட்ட விசேட குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது.

கொழும்பைச் சேர்ந்த போலி முகவரொருவரே இவ்வாறு 55 இலட்சம் ரூபாவை மோசடி செய்துள்ளார். போலி ஆவணங்களைக் காட்டி நம்பகத்தன்மையை ஏற்படுத்தி இந்த மோசடியில் அவர் ஈடுபட்டுள்ளார்.

முறைப்பாட்டுக்கு அமைய யாழ்ப்பாணம் மாவட்ட விசேட குற்றத்தடுப்புப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் வரிக்கொள்கையால் நெருக்கடியில் கல்வித்துறை!

## தீர்வில்லையேல் போராட்டம் வெடிக்கும் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் எச்சரிப்பு

**யாழ்ப்பாணம், செப். 9**

**அரசாங்கத்தின் புதிய வரிக்கொள்கைகளால் ஏற்படும் தாக்கங்கள் நாட்டின் கல்வித்துறையிலும் அரச பல்கலைக்கழகங்களிலும் மிகவும் மோசமாக உணரப்படுகிறது. அரசாங்கம் விரைவில் வரிக்கொள்கைகளில் மாற்றம் கொண்டுவராதுவிடின் பல்கலைக்கழக ஆசிரியர்களும் தொழிற்சங்கங்களும் இணைந்து போராட்டத்தில் குதிப்பர் - இவ்வாறு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது அனைத்துப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் உபதலைவர் கலாநிதி அகிலன் கதிர்காமர் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் பொருளாதார நெருக்கடி தீவிரம் பெற்றுள்ளது. வாழ்க்கைச் செலவு, வரிஅறவீடுகள் என்பன அதிகரித்துள்ளன. அரசாங்கம் மக்களுடைய நிலைமையைக் கருதாமல் வெறுமனே சர்வதேச நாணய நிதியத்தின் கொள்கைகளையும் அதனுடைய இலக்குகளையும் வைத்துக் கொண்டு பொருளாதாரக் கொள்கைகளைத் தயாரிக்கின்றது.

அரசின் இந்தப் பொருளாதாரக் கொள்கையானது கல்வித்துறையிலும் பெரும் தாக்கத்தைச் செலுத்தி யுள்ளது. நாட்டில் இலவசக் கல்விமுறை நடைமுறையில் இருந்தாலும் மாணவர்கள் தொடர்ந்தும் நெருக்கடியைச் சந்தித்துவருகின்றனர்.

பல்கலை மாணவர்களது, போக்குவரத்து, மின்சாரம், இருப்பிடம், உணவு போன்றவற்றுக்கான செலவினம் அதிகரித்துள்ளது.

நாட்டில் அரச பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படும் மாணவர்களின் தொகை அண்மைய ஆறு வருடங்களில் 50 வீதமாக அதிகரிப்பு ஏற்பட்டிருப்பினும் கல்விக்கான அரசின் முதலீட்டின் அளவு 50 வீதத்தால் குறைவடைந்திருக்கிறது.

வரிவிதிப்பு, அதிகரிக்கும் வாழ்க்கைச்செலவு உள்ளிட்டவை காரணமாக அரச பல்கலைக்கழகங்களில் கற்பிக்கும் விரிவுரையாளர்கள் தமது பதவிகளைத் துறந்து நாட்டைவிட்டு வெளியேறுகின்றனர்.

அத்துடன் மக்களுடைய ஈ.பி.எப். நிதி அடுத்த 16 வருடங்களில் ஏறத்தாழ 47 விகிதத்தால் குறையப் போகின்றது. பல்கலைக்கழக ஆசிரியர்களுடைய யு.பி.எப். நிதிகூட 40 விகிதத்தால் குறையக்கூடிய வாய்ப்பு உண்டு.

ஆகவே இந்த வரவு - செலவுத் திட்டத்தில் பெரும் மாற்றத்தை அரசாங்கம் கொண்டுவரவேண்டும் - இல்லையாயின் பல்கலைக்கழக ஆசிரியர்களும் தொழிற்சங்கங்களும் ஒன்றுதிரண்டு அரசின் வரிக்கொள்கைக்கெதிராகத் தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபடுவர் - என்றார். (ச-27)

கையிருப்புச்

துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் கூற்றுப்படி, நாட்டின் உத்தியோகபூர்வ கையிருப்பு சொத்துகள் கடந்த ஜுலை மாதம் 3 ஆயிரத்து 765 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்தது. கடந்த மாத இறுதியில் இந்தச் சொத்துப் பெறுமதி 3 ஆயிரத்து 598 மில்லியன் அமெரிக்க டொலர் என்பதாகப் பதிவாகியுள்ளது. (ம)

போலிச் சான்றிதழை...

குழுவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:

இராணுவத்தின் சிவில் பாதுகாப்புப் பிரிவில் கடமையாற்றிய தென்னிலங்கையைச் சேர்ந்த மேற்படி சந்தேகநபர், 2019ஆம் ஆண்டு வடமாகாணக் கல்வியமைச்சால் மேற்கொள்ளப்பட்ட ஆசிரியர் ஆட்சேர்ப்பில் போலிச் சான்றிதழை வழங்கி தன்னை இணைத்துக் கொண்டுள்ளார். கடந்த மூன்று ஆண்டுகளாக அவர் சேவையாற்றியும் வந்துள்ளார். இந்த நிலையில் ஆசிரியர் தரம் மூன்றில் இருந்து தரம் இரண்டுக்கு தகுதியுயர்வு பெறுவதற்காக அவர் விண்ணப்பித்தபோது அவர் வழங்கிய சான்றிதழ்கள் போலியானவை என்பது தெரிய வந்துள்ளது. இது தொடர்பில் பரீட்சைகள் திணைக்களத்தால் யாழ்ப்பாணம் மாவட்ட விசேட குற்றத்தடுப்புப் பிரிவுக்கு முறைப்பாடு வழங்கப்பட்டதைத் தொடர்ந்து சந்தேகநபர் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

இந்தக் குற்றத்துக்கு உடந்தையாக இருந்த பிறிதொருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளார். (அ-ம-26)

## தென்மராட்சியில் போட்டிகள்

சர்வதேச ஆசிரியர் தினத்தை முன்னிட்டு தென்மராட்சி வலயத்துக்குட்பட்ட அதிபர் ஆசிரியர்களுக்கான கட்டுரை, கவிதை, மென்பந்து மற்றும் வலைப்பந்தாட்டப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

பங்குபற்ற விரும்புவோர் தங்களது விண்ணப்பங்களை கோட்டக் கல்வி அலுவலகத்துக்கு அதிபர் ஊடாக எதிர்வரும் 11 ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பிவைக்குமாறு தென்மராட்சி வலயக்கல்வி அலுவலகம் அறிவித்துள்ளது.

**கட்டுரைப் போட்டி**

இலங்கையின் தற்கால கல்வி சார்ந்த விடயப்பரப்புக்குள் வழங்கப்படும் தலைப்பின் கீழ் கட்டுரை வரையக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

கட்டுரை 500 - 550 சொற்களுக்கு இடைப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

எழுது கருவிகள், காகிதாதிகள் எடுத்து வருதல் வேண்டும்.

கட்டுரை வரைதலுக்காக ஒரு மணி 15 நிமிடம் வழங்கப்படும்.

**கவிதைப் போட்டி**

பரீட்சை மண்டபத்தில் வழங்கப்படும் தலைப்பின் கீழ் கவிதை எழுதுதல் வேண்டும்,

மரபுக்கவிதையாகவோ புதுக்கவிதையாகவோ அமையலாம். 150 சொற்களுக்கு மேற்படாது அல்லது ஏ-4 தாள் 4 பக்கங்களைக் கொண்டதாக அமைதல் வேண்டும்.

வேறு போட்டி மட்டங்களிலோ பத்திரிகைகள், சஞ்சிகைகளிலோ எழுதப்பட்ட கவிதை வரிகளையோ கவிதையையோ மீண்டும் எழுதல் தவிர்க்கப்படல் வேண்டும். கவிதை ஆக்கத்துக்காக 2 மணித்தியாலங்கள் வழங்கப்படும்.

இந்தப் போட்டிகள் நடைபெறும் நேரகாலம் பின்னர் அதிபர் ஊடாக அறியத்தரப்படும்.

மேலும் ஆண்களுக்கான மென்பந்து கிரிக்கெட் போட்டி மற்றும் பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டி என்பனவும் நடத்தப்படவுள்ளன.

பாடசாலை அணியாகவோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பாடசாலைகள் இணைந்து ஒரு அணியாகவோ பங்குபற்ற முடியும் என்றும் தென்மராட்சி வலயக்கல்வி அலுவலகம் அறிவித்துள்ளது. (ச-159)

வேலையாட்கள் தேவை
யாழில் இயங்கும் புத்தக, போட்டோ கொப்பிக் கடைக்கு ஊழியர்கள் தேவை.
தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
076 832 3682
(CS/26162) AH-1

காணி விற்பனைக்கு
ராஜபாதை வீதி, கரந்தன் - இராமபிள்ளை வித்தியாலய முன் வீதியில் (மிக அண்மையில்) 11 பரப்புத் தோட்டக்காணி விற்பனைக்கு உள்ளது.
077 307 5198
(CS/26275 AH)

INFORMATION TECHNOLOGY PARK
Jaffna, Srilanka
Under the purview of the
Ministry of Investment Promotion
MPCS Building,
127,K.K.S.Road, Jaffna, Srilanka
Office :- 021 222 3641
Fax No :- 021 222 3643
அரச நிறுவனமான தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் கீழ்வரும் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான விசேட பிரிவுகள்
2023 September Batch
Dip.in Microsoft Office
Dip.in Desktop publishing
Dip.in Information Technology
Dip.in Computer Programming
Dip.in Wep Page Designing
06 Month Online Course
Dip.in PC Application & Office Management
06 Month
VB.net PHP C/C++
C# Java AutoCAD
20 hours Workshops
Internet & e-mail
Hardware
விண்ணப்பப் படிவங்களை யாழ்.பிரதம தபாலகத்திற்கு முன்னால் உள்ள எமது நிறுவனத்தில் பெற்றுக் கொள்ளலாம்
வார நாள் வகுப்புக்கள் ஆரம்பம் :-27.09.2023
வார இறுதி நாள் வகுப்புக்கள் ஆரம்பம் :-30.09.2023
CENTRE FOR INFORMATION TECHNOLOGY

கொழும்பு விலையில்
யாழ். நகரில் கோழிகள் விற்பனைக்கு உண்டு.
புறொய்லர், கல்பேட்ஸ், பேரன்ஸ், ஊர்க் கோழி, சேவல், விறாத்துக் குஞ்சுகள் மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு.முட்டைகள் அனைத்தும் ஒரே இடத்தில்.
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
(சுகாதார முறைப்படி சுத்தம் செய்து தரப்படும்)
1 Kg புறொயிலர் சுத்தம் செய்யப்பட்ட இறைச்சி விலை 1250/-
24 மணிநேர சேவை (இரவு பகல்)
தொடர்பு: நியு சிற்றி பாம்
நியு சிற்றி கோழிக்கடை
இல.08, சின்னக்கடை மார்க்கெட், குருநகர். யாழ்ப்பாணம்.
(CS 51999)A-1



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் [illegible] இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.09.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org